
ஸ்வய
அநுபவம் !!!
இதழ் I
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஸ்வய அனுபவம்!!!

இதழ் I

## பொருளடக்கம்


1. பாடல் 1 ---------- 3
2. பாடல் 5 ---------- 5
3. பாடல் 7 ---------- 7
4. பாடல் 12 ---------- 9
5. பாடல் 13 ---------- 18
6. பாடல் 14 ---------- 19
7. பாடல்கள் 18 & 19 ---------- 27
8. பாடல் 20 ---------- 30
9. பாடல் 23 ---------- 35
10. பாடல் 26 ---------- 41
11. பாடல் 28 ---------- 47
12. பாடல் 29 ---------- 52
13. பாடல் 30 ---------- 55
14. பாடல்கள் 36 - 38 ---------- 60
15. பாடல்கள் 39 & 40 ---------- 67
16. பாடல்கள் 47 & 48 ---------- 69
17. பாடல்கள் 50 - 52, 54 & 55 ---------- 72


எல்லாம் நீ!

(1)



ஓம்

(ஸத்திய வாக்கை)

ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீ குரு திருவடி தான்"

"நம்பினோர் கெடுவதில்லை"

"தெய்வம் மனுஷ்யாம்!"

யத் பாவம் தத் பவதி!

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்,"

"ஓம்"

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்"

"அகமே ஸ்வரூபம்!"

"ஜெகம், பரமம், ஜீவர்களும்,"

"சிறிதும் இல்லை!"



உ

(1) "நான்" "என்னை" "என்னுடையது" என்றநிலையில் "உடலையும்" நம் கவனக்குறைவால், இதைப்பற்றிய "சொந்த பந்த, பாசம், பற்று" என்ற உடைமையும், உரிமையும், கொண்ட, அபிமான "மனோபாரம்" விடாமல், இருக்கும் வரை, நான் ஆத்மா, நான் பரமாத்மா, நான் பரம்பொருளே, நான் பரம்பிரம்மமே, என்ற ஆத்மாவின் **ஸ்வய அனுபவம்** பெற முடியாது. அவ்வனுபவம் பிரகாசிக்காது. அந்நிலையில், அது வாய் ஞானமாகவே இருக்கும். காரணம், அங்கு மனமானது, "உபாதையால்" கீழ்நோக்கி இழுக்கப்படும். அங்கு மனம், மேல் நோக்கிச் சென்று, "மனோதீதமாகாது" என அனுபவஸ்தர்கள் சொல்லுவார்கள்.

—×—×—×—×—×—×—×—

உ



## பதுமபாடல் (௩)

ஓ சுத்தமான, ஸித்பர சொரூபமான
எந்த வஸ்து உண்டோ, "அது"வும்!
"பர"சக்தியும்! ஒன்றான தன்மையினால்,
"சுதந்திரமாக"
பக்தர்கள் நிமித்தமாக! "கருணையே"
வடிவமாக **அத்வைதத்தை** உணர்வாத
உணர்த்தும் நிமித்தமாக வந்தது!

பொருள்:— காலம்! தேசம்! வர்த்தமானம்!
மனம்! வாக்கு! காயம்! குணம்! குறி! நாமம்! ரூபம்!
ஆகிய இந்த, பத்தையும், உரைமுடியாதது ஆயும், ஏட்டிலோ
எழுத்திலோ, ஒலியிலோ, விளக்க முடியாததான, அந்த
"பர"சொரூபமும்! "யோகமாயாவின்"
மூலஅம்சமான "ஆகாயமும்" இணைந்து, ஓர்
"உருவம்" ஆனதென, ஸ்ரீமஹான்தான் சொல்வார்.

உதாரணம்:— பரசொரூபத்தை "மண்" ஆகவும்,
"மாயாவை" "ஜலம்" ஆகவும்,
மண்ணும் ஜலமும் இணைந்து, பிணைந்ததால், அது
"களிமண்" என்று சொல்வதாம்! அக்களி
மண்ணில், அனேக "நாமரூபங்கள்"!
நம் அம்ச, பக்தர்கள் விளையாடும் நிமித்தமாக,
"கருணையின்" நிமித்தம், அது தான் தானே ஆனது.
என ஸ்ரீமஹான்தான் சொல்வார்.



இம்மநோமய பேதமானது, நான், என்றவ், எனது, என்ற அஹங்கார, அதிகார, அபிமானத்தால் வந்தது!

அந்நியயால் அது "சுதந்திரமே" யன்றி அது, "அடிமை"த்தனம், இவ்வவே இல்லை! ஆனால், அடிமைத்தனம் மாயா தோற்றுகிறதே என்றால் அது "மனோமய பேதம்" ஆகும் என ஸ்ரீ மஹான்கள் கூறுவர்!

அது அத்வைதமாகவே வந்தது.
" " இருந்தது.
" " இருக்கிறது.

வந்தது! இருந்தது! இருக்கிறது! என்ப தெல்லாம், வாக்கிய ஜாலமே! அதாவது வார்த்தையின் மாயாஜாலமே!

அதாவது "சொற் பொருளே!" அது உண்மையல்ல. உண்மை எதுவென்றால்; "உண்டு! இல்லை!!"

இங்கு ஏன் இப்படி இரண்டுபட்டு கூறுகிறீர்களே! அப்படி யானால், அது அத்வைதமாகி விடுமே, என கேட்டால்?

"மனம்" வசம், அகப்பட்டவனுக்கே இப்பாடம்! "அறிவாக" இருப்பவனுக்கு பாடமும், விளக்கமும், தேவை இல்லை! மனவசப்பட்டவனுக்கு "சந்தேகம்" (சலனம் அசைவு) உள்ள தன்மையினால், உண்டு என்றும்! இல்லை என்றும்! எண்ணத் தோடு கூடி இருப்பான். அறிவாக இருப்பவனுக்கு, அதுவாகவே இருப்பதனால், சொல்வாரும் இல்லை! கேட்பாரும் இல்லை

உ



பாடல் 5

3 (A) ஆதி இல்லை, ஆகவே அந்தம் இல்லை
அந்தம் இல்லை, ஆகவே ஆதி இல்லை

(B) நாமரூபம் இல்லை, ஆகவே சொந்தம் இல்லை
சொந்தம் இல்லை, ஆகவே நாமரூபம் இல்லை

(C) "பந்தம்" இல்லை, ஆகவே "முக்தி" (மோக்ஷம்) இல்லை
முக்தி என்ற "மோக்ஷம்" இல்லை, ஆகவே "பந்தம்" இல்லை

பொருள்:— "காலாந்த" அந்த ஒன்றுக்கு. "ஆதியும்" "அந்தமும்" அதாவது அது வந்ததாவதும் அது முடிந்ததாவதும் இல்லை. என்னென்றால் அது "நாமரூபம்" பெறவில்லை. நாமரூபம் இருந்தால் "ஈஸ்வராதிகளோ" மற்றும் "ஜீவர்களோ" "எனது" என சொந்தம் கொண்டாட முடியும். நாமரூபம் இல்லாத தன்மையினால் ஈஸ்வராதிகளோ மற்றும் ஜீவர்களோ சொந்தம் கொண்டாடி அச் "சொந்தத்தால் பந்தப்" பட இயலவில்லை.

அச் சொந்தமும், பந்தமும் இல்லாத தன்மையினால், பந்த நிவர்த்தி என்ற, அதாவது விடுதலை என்ற, முக்தியாகிய மோக்ஷமும் இல்லாமல் போய்விட்டது.



உ

காரணம் என்னவென்றால்:— காலாதீத "அந்த ஒன்றே" அனைத்துமாய்! அதாவது, எல்லாமாய்! அதாவது ஈஸ்வராதிகளாகவும்! ஜீவ கோடிகளாகவும்! அனைத்து "ஜகத்தாகிய" அனைத்து நாமரூப பொருள்களாகவும், "அதுவே" இருப்பதாலும்; அதற்கு அன்னியமாய் "ஏதும்" இல்லாத் தன்மையாலும் மேலே கூறிய, "விகார/விவகாரம்" (பேதமும்! பிரபஞ்சமும்) எதையும் இல்லை!

ஆனால் மேலே கூறிய, அனைத்தும் "தோற்றப்படுகிறதே" என்றால்? இது மாயாவில் தோன்றிய, மாயா மனதின் காரியம் என, ஸ்ரீ மஹான்கள் கூறுவர்.

இம்மனதின், காரியம், எப்படி துவங்குகிறதென்றால் "நான்". "என்னுடை". "எனது", என்ற இம்மாயா மனதின், எழுச்சியானதுணவிக ளிறல், இப்படி தோன்றியதாகப் பேசப்படுகிறது! இவைகளே "நீ". "உன்னுடை". "உனது". என, இம்மாயா மனம், மாற்றி விட்டால், எழுச்சியும், வீழ்ச்சியும், இல்லாத நிலையில், இம்மனம்



உ



நாசம் ஆகும்! அதாவது, "மாயை" ஆதிபிரம்மம் அடங்குகிறது, இல்லாத தன்மையில், அது அதுவாகவே, "தானாகவே" இருக்கும் என்பதே லட்சியம் என அனுபவ ஞானிகள் கூறுவர்!

x — x — x — x — x — x — x

(4) பாடல் 7.

அந்த துவைதமான, நாம ரூப, ஆகமானது, அனைவர்க்கும் "எதிரும் & புதிருமாக" தோற்றுவதால், அது ஸத்தாகவே தோற்றப்படுகிறது! விளம்பப்படுகிறது! அனுபவ நடையில், அனுபவிக்கப்படுகிறது. ஆகவே இதை, "ஸைருமே ஸித்" சொரூபமென உணர்வதில்லை!

கருத்து:— நாமரூப, துவைத பிரபஞ்சமானது, "மனம்" படைத்த அனைவரிடமும் "மட்டும்," எதிரும் புதிருமாக, தோற்றுகிறது என்கிறார்.

எதிர்:— முன்னும்! பின்னும்! பக்கங்களாகவும்! பிரத்யட்சமாகவும்! நிதர்சனமாகவும்! (தற்காலிக) ஸத்தியமாகவும்! தோற்றமாகவும், ஒலியாகவும், அசைவாகவும் அமைவதாகும்!

(8)



இ

புதிர்:— விசித்திர, விநோத, விபரீத, விகல்ப (ஏற்ற முறை) விசித்திர, வீரிய, முதலிய "ஷட்கோண" (அறுகோண) நிலையில், மாற்றம் & மறைவு / மறைவு & மாற்றம் / இப்படி ஓர் "மாயாஜாலம்" காட்டுவது, புதிர் ஆகும், எனச் சொல்லுவார்கள்.

இப்படி முன் கூறிய, நிலையில், எதிரும் & புதிருமாக, தோற்றுவது "யோக மாயா" வாகும்.

அப்படி தோற்றுவதில், நான் / என்னை / எனது / என புரிந்து விளையாடுவது, "விஷ்ணு மாயா" என்ற "மாயா மனம்" ஆகும்.

இம் மனம் படைத்த மனித இனமே "காண்கிறேன் / கேட்கிறேன் /" அது பற்றியே, "பேசி, பேசி, பேசி, பேசியே!" இவ்வாறு உயிர் கொடுக்கிறேன்.

ஆகவே துவைதம், விளங்கப்படுகிறது. அத்வைதம் மறைபடுகிறது. (அத்வைதம் அழியாதது) அதனால் இம்மனதால், விளம்பப்படுவதால், ஸத்தியம் ஆகிறது.

இந்த "அறிவு" பிரகாசித்து விட்டால், இது, சித்தமாகிய மனதின், தோற்றம் அல்ல என்பது உணர்ந்து ஆகி, இது "ஸ்துபா" சொரூபமென்று உணரப்பட்டு, துவைத பயம் போய், அத்வைத ஆனந்தம் பிரகாசிக்கும்.

உ



பாடல் ௧௨

ஞ அனுப்பிரமாணமாவது, அந்த காலாதீத "ஒன்றுக்கு" அன்னியமாக இல்லை என்பதே சத்தியம்! ஆனாலும் "ஞானமான" மனதை உடையவர்கள், "ஸ்ரீபகவானின்" கருணையை, பெருந்தன்மையினால் வெவ்வேறாக நாமரூப ஜகத்தை கண்டு கண்டு! கேட்டு கேட்டு! அதுபற்றி பேசிப் பேசியே, "துவைத" பயம் போகாமல், "மஹா" பவதுக்கத்தை, அடைகிறார்கள்!

பொருள்:— மண்ணுக்கு பாண்டங்கள், எப்படி அன்னியம் இல்லையோ! அதுபோல் காலாதீத "பரசொரூபத்திற்கு" அயலாக, ஜக ஜீவ கட படாதிகளாகிய, அனைத்து "நாமரூபங்களும்" இல்லவே இல்லை என்பதே சத்தியம்! ஆனாலும்! "மனம்" வசம், அகப்பட்ட இந்த "மனிதனுக்கு" மட்டும்! அனைத்தும், அந்த ஒன்றாக தெரிவதில்லை. காரணம்:— "பகவான்" கருணையை பெறாததே காரணம் என்கிறார்கள், ஸ்ரீமஹான்கள்!

உ



இதை கவனிக்கவும்:

இங்கு **கலி** யுகமஹான்களும்!
மஹா **பாண்டித்யம்** பெற்ற
வித்யான்களும்! அத்வைதத்தை,
அனுபவம் இல்லாமல், படித்த நிலையில்,
"**போதிப்பவர்களும்**"! (சாதிப்பவர் அல்ல)
ஸ்ரீபகவானுக்கு, முக்யத்வம் கொடுப்பதில்லை!
அழுதால் உண்மை பெறலாம்! அதுவும் ஆகலாம்!
"**அழு**" ஆனந்தநிலையில், "**ஆனந்தமாக சிரிக்கலாம்**"! அந்த ப்ரம்மானந்த
நிலையில் கரைந்து, மெய்மறக்கலாம்! (அழுகாமல் சிரிக்கமுடியாது) என்ற, ஸ்வய
அனுபவம், பெறாதவர்களாகும்! காரணம்?
"**அழுதால்**" வினைகள், கழிந்து நாசமாவதை
உணராமல்! அழுதால் காண்பவர்கள், சிரிப்
பார்களே என்றும், அப்படி அவர்கள், நம்மை
ஏளனம் பண்ணும் போது, நம் படிப்பு! பட்டம்
பதவி! கௌரவம்! அந்தஸ்து! என்னவாவது?
என்ற கௌரவப் பிரச்சினையாலும்!

உ

(11)



உலகம் நம்மை மதிக்காதே!
நாம் உலகில் பெரும் புகழுமாய், வாழ முடியாதே
என்றும், இன்னும் பல பல நிலைகளில்
"மான ஈனத்தில்"
கட்டுண்டு "வறட்சியாகவே!"
இருந்து விடுகிறோர்கள். தனியாக இருப்பதிலே!
இந்த நிலையில், மனம் வருந்தி போவதால்.

ஸ்ரீ பகவான் ஒரு மாயாவி என்றும்,
" மாயாதிரையால் மூடியிருக்கிறான் " ,
" நாமரூப, ஜக உலகிதே " ,
" கருணை நமக்கு தேவையில்லை " ,
" என்ற எண்ணமே ஓர் பந்தமே " ,
" நம் மனமே, கற்பனை வடிவம் " ,

இப்படி இன்னும், பல நிலைகளில், ஸ்ரீபகவானை, "கழித்துகட்டி" விடுகிறோர்கள்!

ஸ்ரீபகவான் ஓர் மாயா சொரூபமே! அவன் ஓர் சூட்சும வடிவமே! அவன் உன் எண்ணத்தின்படியே தோன்றக் கூடியவனே! அவனுக்கென, எந்த நாமரூபமும் "ஸ்திரமாக" இல்லையாதலால் இதையே ஓர் அன்பர், தியானம் பாடலில் பாடும்போது,



உ



நீஎந்த வடிவில் கருதினும்;
அந்த வடிவில் தோன்றுவார்!
சொந்த வடிவம் பெயரில்வார்;
சுத்த "மோனாவின்" மயமாம்!
எங்கும் உள்ள கடவுளை – உன்
இதயக் குகையில் காணலாம்!
இங்கு (இதயத்தில்) கண்ட பிறகுதான்,
இருப்பதெல்லாம் ~~காண்பதெல்லாம்~~ "அவன்" மயம்! என்றாகி!
தனக்குள் உணர்ந்து, அவனை அனுபவிக்கும்போது,
நம் "மனஅறிவினை" மனம்
அடங்கி, அடங்கி, அழிந்து மயமாகவே அதுவே அறிவு
நேரில் "பிரத்யக்ஷமாவான்"
அதாவது நேருக்கு நேர், தரிசிக்க முடியும்! அங்கு
அவனுடன்
பேசலாம்! உறையாடலாம்! உறவாடலாம்!
கொஞ்சி கெஞ்சி விளையாடலாம். இது சத்தியம்!
ஓர் "குழந்தையாய்" நீ ஆகுவாயாகு!
அவனும், ஓர் "குழந்தையாய்" அவசியம் வருவான்
இது, இந்த ஏழை, பரதேசியை சித்தியத்தின், ஸ்வய அனுபவம்



உ

(13)

நான்கு மஹா வாக்கியங்களுள், "உபதேச" வாக்கியமாகக் கூறப்படுவது:- "தத், த்வம், அஸி"! ஆகும். இதன் பொருள்?

(1) தத் - நம் என்ற ஈசன் நிலையாகிய ஸ்ரீபகவானை, ஏன் முதலில் போட்டார்கள் என்றால்? "நாம்" "ஈசன் என்ற" "ஸ்ரீபகவானே"!

(2) த்வம் பத ஜீவனாகிய, நம்மை ஏன் இரண்டாவது, போட்டார்கள் என்றால்? எதனாலும், எவ்வகையிலும், எவராலும், கட்டுப்படுத்த முடியாத "சுதந்திர மான நாம்" (ஸ்ரீபகவானாகிய நாம்)

ஓர் விளையாட்டின் நிமித்தம், மாயாமனதை வைத்துக் கொண்டு "பந்தஜீவன்" என ஆகி நடிக்கிறோம்! நமயின் நிலையில்தான் நாம் ஜீவன்! உண்மையில் நாம் ஸ்ரீபகவானே! இதன் உட்கருத்து:- பந்தஜீவனாக, வேஷம் போட்டு நடித்தாலும், அப் பந்த ஜீவன் வேஷத்தை "ஜோந்தாஸ்" மட்டுமே ஸ்ரீபகவான் ஆக முடியும்! இதுவே பிரமாண உண்மை! இதன் அடுத்த உண்மை, எப்படி இருக்கிறது என்றால்?



"ஸ்ரீபகவான்" நிலையிலிருந்து
ஓர் ஜீவன் நிலைக்கு இறங்கி,
வந்த நாம் (ஸ்ரீபகவானாகிய நாம்) ஜீவர்களை,
அதாவது ஜீவ வேஷத்தை, விட்ட மறுகண
ணம் ஸ்ரீபகவானாகத்தான் ஆக முடியுமே தவிர,
அன்னியமாகிய பரம்பொருள் ஆக
முடியாது, என்பதே சத்தியம்! ஓர் உண்மை எப்படி
இருக்கிறது என்றால்? பந்த ஜீவன் என, வேஷம்
போட்டோம், அவ்வேஷத்தை களைந்து அழிப்பது என்றால்
அப்பந்த ஜீவன் என்ற பட்டம் எதனிடம், வாங்கினே
மோ, அதனிடம் விடுவதுதான் முறை! அப்படி முறை
யாக விடாமல், நாம் ஆத்மா என்றும்! நாம்
பரம்பொருள் என்றும்! கல்ப கோடி காலம்,
சொன்னாலும். அதுவாய் நாமே! அது அனுபவ ஞானமாகாது.
அச்ஜீவ வேஷமானது "மாயா" என்றும்,
மாயாவைப் பற்றிய, ஸ்ரீபகவானாலும். தோன்றிய
நாமரூப ஜகத்தை நான், என்றால், என்னுடையது,
என சொந்தம், கொண்டாடியதால், வந்ததாகும்.



எம்மை, சொந்தம் கொண்டாடி, வாங்கிக்கொள்வோம் அப்படியே, அவனிடமும் அவன் மாயாவிடமும்,

"ஸ்வாமி நீயே! உன்னால் உனதே" என விட்டுவிட்டால் அதனைத் தொடர்ந்த வினை முடியும்! வினை முடிந்தால், அந் நிலையில் விழுந்தாலும், எந்த நிலையில், "விதேக முக்தி" சாத்தியமாகும்!

ஸத்குரு கிருபையினால் கிடைத்த ஆத்ம ஞானத்தால் மனம் மலமற்றதாகி "ஜீவன் முக்தி"யும், பெற முடியும்! ஆகவே ஸ்ரீ பகவான் கருணை, அவசியம் வேண்டும்! என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

மேலும், த்வம் பத ஜீவனானவன்! தத் பத பரமாத்ம (ஸ்ரீ பகவான்) நிலையை அடையாமல், அஸி பத பரம் பொருள், ஆக முடியாது என்பதே, ஸத்தியம்!

மேலும் ஓரிடத்தில், எம் ஸ்ரீ ரிபு மஹான் சொல்லும் போது, "தத்பதமே தானாகி" முக்தனாயி! என வருவதால், தத் பதத்தை தள்ளிவிட்டு, த்வம் பத ஜீவன், அஸி பதம் ஆக முடியாது என்பதே ஸத்தியம் என ஸ்ரீ மஹான்களின் அனுபவம் இருக்கிறது!



உ

(16)

இங்கு "கள்ள மனம்" என்று ஏன் குறிப்பிடுகிறார் என்றால்?

"கலிதோஷ ஹரட்சியான" வாய் ஞானத்தையே! அனுபவ ஞானமாக, ஏமாற்றி! ஏமாற்றி! அம்மாற்றத்திலேயே; "ஏமாறி" கிடந்து, உழலும் மாயா மனதையே, கள்ளமனம். என ஸ்ரீ ரிபு குறிப்பிடுகிறார், என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

இங்கு "நல்லமனம்" என்றால்? ஸ்ரீபகவானை, நம்பி, அவன் கிருபையால், "வின்" உடலையும்! மனமடமையான "உடைமைகளையும்" ஸ்ரீபகவானிடம், சர்வார்ப்பணமாக விட்டநிலையில், "தத்பத" சொரூபமான அவனே! "த்வம்பத" சொரூபமான, "நம்முடன்"! இணைந்து, கலந்த நிலையில், மனம் "மஹத்தால்" அதுநல்லமனம் ஆகும்! இப்படி அனுபவநிலை அடைவதையே, தத், த்வம், அஸி என்பதை, ஸத்குருவின் உபதேச வாக்கியமாக, ஸ்ரீமஹான்கள் சொன்னார்கள்.



உ

(17)

"பவதுக்கம்":— பவம் என்றால்,

"ஆழமான"! "கரைகாண முடியாததான"! அதி "பயங்கரமான"!

துக்கபயமே சமுத்திரமாய்! சமுத்திரமே துக்கமும் பயமும் நிறைந்ததான! "அஞ்ஞான" "இருளான" ஓர் பயப் பிராந்திமயம்! அதுவே பவதுக்கம் ஆகும்!

முன் பக்கத்தில், ஓர் முக்கிய குறிப்பு என்னவென்றால்? தத், த்வம், அஸி, என்ற மஹாவாக்கியத்தில், தத்பதத்தை முதலிலும், த்வம் பதத்தை, இரண்டாவதாகவும் போட்ட காரணம் என்னவென்றால்? சொந்த, பந்த, பாச, பற்றிலேயே, உழன்று, உழன்று, கரையேறுவதற்கு ஓர் துறை காணாமல், மயங்கி கலங்கி, சோர்ந்து, அயர்ந்து, தவிக்கும் ஓர் ஜீவனுக்கு, திரும்பவும், கலக்க பயத்தை, உண்டுபண்ணக்கூடாதே, என்ற கருணையினால், ஜீவாத்மாவாய் இருக்கும் நீயே பரமாத்மா எனகூறாமல்! பரமாத்மாவாய் உள்ள நீயே! ஜீவாத்மாவாய் நடிக்கிறாய்! எனதும் உத்தமசீடனே, உனக்குவித்து அதுவே நீ! என்றும் நீயே அது என்றும், ஓர் "ஏணியாய்" இருந்து அவனை "பரன்" என்ற, ஜீவன் முக்தியை அருள்கிறார்! ஸ்ரீகுருதேவர்.

—×—×—×—×—×—×—×—×—



உ

பாடல் (13)

6 மனம் புத்தி சித்தம் என, இம்மூன்றும் ஒன்றே! இதில், மனம் என்றால், குற்றம் குறைகளான "கற்பனை" என்றும், புத்தி என்றால், அக்கற்பனைகளை, விரிவடையச் செய்து "விகாரம்" என்ற, "பேதம்" உண்டாக்குவது என்றும், சித்தம் என்றால், அப்பேதத்தை, இதுதான் என "உறுதி" பண்ணுவதும் ஆகும்!

ஆகவே இங்கு "சித்தம்" முதலிடம் பெறுகிறது என, வைத்துக் கொள்ளவும். இந்த சித்தம் என்று, ஒருபொருள் உள்ளதென்று சிறிது சிந்தித்தாலும், உடனே "ஸித் பரமே" சித்தமதாய், தோன்றியிடும். அச்சித்தமே, உடனே ஜகத்தாகவும், ஜீவசொரூபமாகவும், ஈஸ்வராதிகளின், ஆஞா விதிகளாகவும், தோன்றி இன்பத்தையும், துன்பத்தையும், மாறி மாறி, கொடுக்கும் என்றும், உன்னுடைய, உறுதியான திட "நம்பிக்கை"யிலவ், சித்தம் என்பது இல்லை என்றும், ஸிதம்பரமே, உண்டு என்றும், உறுதி கொள்வாயாக!

பொருள் :- மண்ணும், ஜலமும், சேர்ந்ததாலேயே "பாண்டம்" என உண்டானது. அதேபோல் பரம் என்ற தாவாதீத பரசொரூபமும், "பசை" போன்ற மாயாவும் சேர்ந்ததாலேயே, நாமரூப, ஜகஜீவ, தோற்றங்கள் உண்டாயின. இதை மாயாமனம், அஹங்காரத்தாலும், அபிமானத்தாலும், விளையாடுகிறது என, "உறுதிபூண்டு" சித்தத்தின், போக்கு வரவு காரியம்!

உ



நடைபெறும், "வினை/விதியை" விளையாட்டுகளிலும், ஆழ்ந்து போகாமல், எல்லாமே "ஸ்ரீபர" சொரூபமே என துன்பம் நீக்குவாயே.

பாடல் (14) (மணிதர் & கேசர்)

7 நரர் என்றும், சுரர் என்றும், நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன, மற்றும் அனைத்து உயிரினங்களும் என்றும்; நானாவிதமாக காணும் "தோற்றம்" அனைத்தும் "கண்களுக்குத்" தெரிகின்ற, ஸ்ரீபகவான் சொரூபமே என திடமாக நம்பு! அங்கு இருகுணமும் இழக்க வேண்டும்! அமல ஸத்வம் ஓங்க வேண்டும்! அப்போதுதான், மேலே கூறிய நிலையில், ஸ்ரீபகவானை, நேருக்கு நேராக, காண முடியும் என்கிறார்!

பொருள்:— (A) இருகுணமும் இழக்க வேண்டும்:— "ரஜஸ் & தமஸ்" ஆகிய இவ்விரண்டும், அழிந்து நாசம் ஆகவேண்டும்! காமக் குரோதாதி, ஆறுகுணங்களும்! மற்றும் தவி தோஷமாகிய, நான்! என்னுடைய! எனது! என்பதில் விளையும், சொந்தம், பந்தம், பாசம், பற்று, இவற்றின், இன்ப துன்பம், இவையாவும் "நாசம்" ஆவதே, ரஜஸ் தமஸ் அழிந்து நிலையாகும்.



உ

(20)

குழந்தைகளே! நாங்கள் கூறிய இவைகள், அழிவது எப்போது? ஸத்வ குணம் மேலோங்குவது எப்போது? என்ற "பயம்" தோன்றுகிறதா? பயம் வேண்டாம்! கவலையும் வேண்டாம்! "அவசியம், உங்களால் முடியும்! நீங்கள் அனைவரும் "எம்" குழந்தைகள்! "நம்பிக்கை" உங்கள் வசம்! அதன் பலன், "எம்" வசம்!

(3) "அமல" ஸத்வம், மேலோங்க வேண்டும்:- அமலம் என்றாலே, மலமற்ற நிலையாகும்! மலமற்ற நிலை என்பது, ஆணவம்! கன்மம்! மாயை! ஆகிய மூன்றும், நிர்மூலமாக அழிந்த நிலையாகும்!

(1) ஆணவம்:- நான், என்னால், என்னுடையது, என, மூன்றும் அழிந்து! எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என்ற சர்வார்ப்பணமே ஆணவம் அழிந்த நிலையாகும்!

(2) கன்மம்:- சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம், என்ற "மூன்"றையும் அழிய வேண்டும்! இதில் சஞ்சித மாகிய ஆத்ம மூட்டை என்பது, ஸத்குரு தேவரிடம், கேட்கும் ஆத்ம ஞானபாடத்தால், எல்லாம் "பொய்யே" என்றும், தம் ஸ்வய அனுபவத்தினால் எல்லாம் அந்த "ஒன்றே" என்ற ஞானத்தீயால் கருகி சாம்பல் ஆகிவிடும்!



(௨௧)

உ

பிராப்த வினையாகிய உன் பாவம் புண்ணியமான வினைகளை அனுபவித்து இந்த ஜன்மாவோடு முடிந்து விடும்!

உன்னுடைய சரீர வாக்மனத்தால், நீ பெற்ற ஸ்ரீபகவான் "**கருணையினால்**" பிராப்த வினை, உனக்கு தோற்றமே, உன் அனுபவத்தில் "**வலிமை குன்றி**" அனுபவித்து முடிந்து விடும்!

ஆகாமியம் என்ற "**தொடர் வினை**" ஆனாலது நான், என்னால், எனது, என்ற உன் சொல்லாலும்! உன் செயலாலும்! உன்னைத் தொடர்ந்த வினை, எல்லாம் நீயே! உன்னால்! உனதே! என்ற உன் சொல்லாலும்! உன் செயலாலும்! உன்னைத் "**தொடர**" முடியாமலும் உன்னைத் "**தொட**" முடியாமலும் நசித்து தானே அழிந்து விடும்! ஆகவே, கர்மம் எனச் சொல்லும், "**மூவினை**"யும் நாசமாகி விடும்!

③ மாயை :— இல்லாததை இருப்புடையதாக, காட்டுவது "**மாயா**" ஆகும் :- இம்மாயாவில், நான், என்னால், என்னுடையது, என்ற அஹங்கார அதிகார, ஆதிக்க உரிமை உடைமையால் அபிமானம் கொண்டு மயங்குவது **மாயாமலம்** ஆகும்.



உ

(௨௨)

இம்மாயா மனமானது அம் மயக்கத்தை ஒழிப்பது, முன்பே கூறியபடி, சர்வார்ப்பணம் ஆகும். இந்த சர்வார்ப்பணத்தால், மனம் "அழிந்து", மனம் "மறைந்தாகி" விட்டால், மயக்கம் "மாயாவும்" செயலிழந்து விடும் எனச் சொல்வதைவிட மாயாவே "இல்லை" என்றாகி விடும் எனச் சொல்லலாம்.

மேலே கூறிய இப்படி முக்குணமும், "மூவினையும்" அழிந்த "மனமற்ற" நிலையே, ஸ்ரீ ரமணர் சொல்லும் வாசகம்: இருகுணமும் இழந்து, அமல ஸத்வம் மேவாயி! எனக் குறிப்பிடுகிறார். இந்நிலையிலே மனம் நம் வசமானதால் இங்கு "சூட்சும மனதை" விருத்தி கொண்டே ஸ்ரீ பகவானை காணலாம்.

என்றும் உரையாடலாம், என்றும் உறவாடலாம் என்றும். முடிவில் அவனே நாம், இனி நாமே அவன்! என்றும். பின் அனுபவத்தில், பரநிலையையும் பெறலாம் எனச் சுட்டிக்காட்டுகிறார்.



உ

௨௩

"ஸத்தியம்" பகர்கின்றேன்!

இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

ஸ்ரீபகவான் காட்சியை "அனைவரும்"
பெறமுடியும்! இதன் சாதனை யாவது?

(1) நாம் ஸ்ரீபகவானின் குழந்தையே என உறுதியாக நம்புவாயாக!

(2) அதேபோல் அனைத்திலும், ஸ்ரீபகவானே நிறைந்திருக்கிறான், என நம்புவாயாக!

(3) அனைத்திலும், அவன் நிறைந்திருந்தாலும், மனம் படைத்த அனைவரிலும் அவன், "இயங்க முடியும்" என்றும், மற்றும் அனைவரிலும், அவன் "இருக்க" முடியும்! என்றும் இருக்கிறான்! என்றும், முழுமையாக நம்பு! ஆனால் அங்கு அவன் இயங்க முடியாதென்பது ஸத்தியம்

(4) அனைத்தும் அவன் செயல்! என்றும், அனைத்தும் அவன் பொருள்! என்றும், அவனன்றி அணுவும் அசையாது என்றும், முழுமையாக நம்பு!



(5) மேலே கூறிய நான்காவது நிலை ஸத்தியமானவை: உனக்கு இருப்பும் இல்லை! உனக்கு இயக்கமும் இல்லை!! உனக்கு உனதென்ற "உடைமையும்" இல்லை!!! என்பதே ஸத்தியமாகும்!

(6) மேலே கூறிய, ஐந்தாவது நிலை, ஸத்தியமானவை: உன் அறியாமையின், அதாவது உன் கவனக்குறைவின் அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், உரிமை, உடைமையின், அபிமானம் இவற்றால் வரும், மானஈனம், சூடு, சுரணை, லஜ்ஜை, வெட்கம், இவைகள் நாசமானதே மட்டும் "ஐந்தாவது" நிலை ஸத்தியமாகும்!

(7) மேலே கூறிய, ஆறாவது நிலையை நீ பெறும் போது ஸ்ரீமஹான்களின், ஸத்திய வாக்காகிய, அனுபவம் தணிக்க வைப்பான்! ருசிக்க வைப்பான்!! இயல்பாக தன்மையை கொடுப்பான்!!! இம்மூன்றின் நிலையாலும் அவன் உன்னைக் "கெடுத்துவிடுவான்" கெடுத்து விடுவான் என்றுணர்ந்து உன்மனம் அமிழ்ந்து அறிவாகிவிடும்!



உ

௨௫

8 உன்னை (அஹங்கார அபிமானத்தை) அவன் முழுமையாக கெடுத்த அடுத்த "விதையே"! அவன் "எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்!!!" நிறைந்து நிற்பான்! என்பதே சத்தியம்!

9 இந்நிலையில் தான்:- நீ எந்த வடிவில் கருதினும் அந்த வடிவில் தோன்றுவான்! என்றும், தமக்கென சொந்த, வடிவம், பெயரில்லான்! "சுத்த மோன விண்மயமாம்"! என்ற நிலையில், உன் எண்ண வடிவில், காட்சி பெறுவாம்! குவாவவாம்!
அங்கு ஆடவாம்! பாடவாம்! கொஞ்சவாம்! விளையாடவாம்! உரையாடவாம்! உறவாடவாம்! அது உன்னை நீயே செய்யும் காரியமாம்!

10 அவனே நாம்! நாமே அவன்!! என்ற நிலை பெற்ற பின், நம் அறியாமையின் மனமும்! அவன் இயக்க "மாயாவும்" வெய்யிலின் மஞ்சு நீரென மறைந்து விடும்!



உ

(26)

கற்பனையின் மனமும், கற்பனைக்கு நாமரூப உரிய மாயாவும், மறைந்த நிலையில், அங்கு "நம் நாமாய்" அதுவே "நாமாய்" நாமே "அதுவாய்" காலசக்தி அந்த, ஒன்றாய் இருப்போம் என்ப தேகஸத்தியம், இதனைத்தான் அப் மதிரன் காவது பாடலில் எம் ரிமு சொன்னார்:-

நரர் சுரராய் திரியக்காய் நகவதிக்
நாறுவாய் நாடியிரும் நாடை மெய்வாம்
தெரிவுருவாய் திகழ்கின்ற தேவதேவன்
திருவுருவே என்று திடக்கியானை செய்காலே

பரசிவம் என்ற, ஸ்ரீ பகவானை நிகரிஸனமாக பிரத்யக்ஷமாக, "நேருக்கு நேர்" காணவாம் என எம், ஸ்ரீ ரிமு மஹா ஆத்மா சொன்னார்.

இப்பாடலில் சொல்லும், சூட்சும தேவிருக்தி என்பது "சாட்சி" பாவனையாகும், இம்மனதிற்கு நாமரூப பிரவிருக்தியானது (அற) "தாஸவிருத்தி" எனச் சொல்லப்படுகிறது. தாஸவிருத்தி சித்தால் அன்றி சாட்சி பாவனையென்ற, சூட்சும தேவிருத்தி சாத்திய மாகாதென ஸ்ரீ மஹான்கள் சொல்வார்!

—×—×—×—×—×—×—×—×—



8 பாடல் 18 & 19!

அறிந்த பொருள்,, எல்லாம்,
"வாய்ஞானம்" என ஆகவேண்டாம்!
"அனுபவஞானம்" என ஆக வேண்டும்!!
அனுபவ ஞானமாக, எல்லாம் பிரம்மமே! அதுநானே!
என "மனத்தூய்மையுடன்!" செய்.
வேத வேதாந்தங்களின் சூட்சுமம்:- தீமை
செய்கின்ற, "சித்தம்" இல்லை! கண்ணால்
காண்கின்ற! காதால் கேட்கின்ற! தொட்டு
உணர்கின்ற "நாமரூப" ஜகமும் இல்லை!
அவைகளை, நான், என்னுடைய, எனது, என்று
அஹங்கரிக்கின்ற "மனமும்" இல்லை!
உயிர் நாட்டம் இடம் இல்லாமல், (சமுத்திர ஜலம்
போன்று) "மலமற்ற" அறிவே! அதாவது ஆத்மாவே!
நிறைந்திருக்கிறது என்ற ஞான ஞானத்தால்,
தூங்காமல் தூங்கும் "நிஷ்டையில்"
சத்தியமான ஸ்ரீ பரியந்தம் (பரபாவனை) அப்யாசம் செய்து சாந்தமாவாய்!



உ



பொருள்:— வாய் ஞானம்:— இப்படி இருக்க வேண்டும்! அப்படி இருக்க வேண்டும்! இப்படி பேசக் கூடாது! அப்படி பேச கூடாது! இப்படித்தான் பேச வேண்டும்! இதை பார்க்கக் கூடாது! இதை சாப்பிடக் கூடாது! இதை தொடக் கூடாது! பக்தி இப்படித் தான் பண்ண வேண்டும்! ஞானம் இப்படித்தான் அனுபவிக்க வேண்டும் என்ற நிலையில், அறிவுரையின் "பொருளாக" இருப்பது வாய்ஞானம் ஆகும்!

அனுபவ ஞானம்:— எண்ணம், சொல், செயலால், "அடங்கி" எவரையும், "அடக்காமல்"! எந்த நிகழ்ச்சியையும், காட்சிகளையும், வார்த்தைகளையும், விருப்பு! வெறுப்பு! இல்லாமல், இது ஸ்ரீபகவானின் கருணையே என அனைத்தையும், "பொறுமை"யுடன், ஏற்றுக் கொண்டு, நாம் ஸ்ரீபகவானின் அம்சமே என்றும், காலத்தால் ஒன்றும், ஸ்ரீபகவானும், நாமும், "ஒன்றே" என்ற "திட உணர்வுடன்" சந்தேக கலக்க பயம், இல்லாமல், ஆனந்தமாக இருப்பது அனுபவஞானம் ஆகும்!

மன ஒருமையுடன்:— அந்த ஒன்றுக்கு அன்னியம் எவையும் இல்லை! நாமும் அந்த ஒன்றுக்கு அன்னியமாயில்லை, என்ற திட உணர்வானது, தைலதாரை போல், சிந்தித்திருப்பது மனவொருமையாகும்!



உ

"போதிக்காதே, "சாதிப்பா யாக! "குருவாய் இராதே! சிஷ்யனாக இரு! உன் சாதனையே, அனைவர்க்கும், அனுபவ பாடம் ஆகட்டும்!

இறை குருவுணர்வுடன், நீ எது செய்தாலும், அது சாதனையாக முடியும். தற்காப்பு சக்தியுடனும், சூழ் கவன சக்தியுடனும் நீ எது செய்தாலும், தற்புகழ்ச்சியாகவும், தற்பெருமையாகவும் தான் இருக்க முடியும். அது சாதனையும் ஆகாது! அனுபவமும். ஆகாது! அறிவையே உண்மையென்னும்!

மேலே சொன்ன நிலையில், நீ அடங்காமல்! நீ அடங்கு!

சாதனை செய்யும் போதுதான், "உன்" சித்தம் தானே மறைந்து "நின்" மயமாகும்! "உன்" கண்களால் காண்கின்றதும், காதுகளால் கேட்கின்றதும், அயமீறி "வாக்கால்" விமர்சிக்கிறதும், தொட்டு தொட்டு, உணர்ச்சிகளுக்கு உன்னை அடிமையாக்கியதுமான, அனைத்தும், "நாமரூப" ஜகமும், "மண்" பதுமைதானாக, இயல்பாக, எந்த முயற்சியும், பயிற்சியும், சாதனையும், இல்லாமல் "தானே" மறைவிடும். அங்கு ஆணவம் கன்மம் மாயை என்ற "மும்மலமும்" இறந்து போன தன்மையிலே,





மனமும் மௌனத்தாகிவிடுகிறது!

இந்நிலையில், ஓர் அன்பர்

பரப்பிரம்ம ஸ்துதியில், யாருமே போது;

செய்வதொன்றும் அறிகிலோம்;

ஒரு திக்கும் தெரியாத எம்மை;

தெய்வம் நீயே! இந்த வேளையில்; நீயாம் துயர்மாற்றவே,

பெய்வாய், "கருணாமழை" எனும்;

பரப்பிரம்மமே! பரம் பிரம்மமே! என்றார்!

இந்நிலை பெறும் போது, அங்கு மனம் மௌனத்தாகிறது!

புத்தி விகாரமும் விவகாரமும் கெட்டுவிடுகிறது!

சித்தம் ஸ்திர சொரூபமாகி விடுகிறது!

அஹங்கார அபிமானம், நான், என்னால், என்னுடையது!

அழிந்த தன்மையினை! அங்கு;

ஓம் ஸாந்தி! ஓம் ஸாந்தி!! ஓம் ஸாந்தி!!!

என்ற நிலையில், "ஹரித்துயில்" (தூங்காமல், தூங்கும் நிலை) இயல்பாகவே, சாத்தியமாகி விடுகிறது!

(ஹரித்துயில் என்றால், அறிவோடு இரண்டற கலத்தல்)

---

பாடல் ௨௦

ஓ "மனதின்" செயலே "செயல்" ஆகும்!

தர்மாவான "தேகத்தின்" செயல் "செயலல்ல"!

இதை சற்று, உள் ஆழ்ந்து, கவனித்து உணரவும்!



உ

(31)

பொருள்:— பம்பரம் என்றால் உடல் என பொருள் கொள்ள வேண்டும்! கயிறு என்றால் மனம் என, பொருள் கொள்ள வேண்டும்!! பம்பரத்தை ஆட்டுபவன் என்றால், விதிநாயகன் என்ற, ஸ்ரீபகவானைக் கொள்ளலாம். மேலே கூறிய இம் மூன்றிலும், ஏதேனும் ஒன்று இல்லையானால் "பம்பர" (உடல் உலக விளையாட்டு) விளையாட்டு நடைபெறாது! நடைபெற இயலாது!
பம்பரம் என்றால், உடல் என்ற புண்ணிய பாபம் ஆகும்!
கயிறு என்ற மனம், முக்குணங்களையும், பிணைத்து இழைக்கின்ற "தோஷ" குணங்கள் ஆகும்!
ஆட்டுபவன் என்ற விதிதேவன், "வினை" (பாவம்) இல்லாமலும், "மனம்" (தோஷ குணங்கள்) இல்லாமலும், உலகம் என்ற நாடகத்தை நடத்த முடியாது! நடத்த இயலாது! ஆகவே, மனம் என்ற கயிறே, புண்ணிய பாப வினையை, ஆட்டிவைப்பதால், "மனம்" இல்லையானால், புண்ணிய பாப "வினை" இருக்கவும் முடியாது! இயங்கவும் முடியாது!! ஆகவேதான், மனம் தன்னால் செய்ததுவே செய்ததாகும். என்றும், பிறரென்றால் (உடலால்) செய்வது எல்லாம், செய்தது ஆகாது, என்றும் சொன்னார்.



உ



இங்கு ஆட்டுவது, விதியாக இருந்தாலும், விதியும், மனமும், இல்லையானால், விதிக்கு வேலை என்பதே இல்லை என்பதே சத்தியம்! மேலும் ஒரே முக்கியம், என்னவென்றால்? தூலம் என்றால், அது வெறும், "ஜடமே"! (வினை) கர்மா அனைத்தும், எண்ணத்தாலேயே, சூழப்பட்டது (மனம்) நல்வினை தீவினைக்கும், எண்ணமே மூலகாரணமாக இருக்கிறது. தூலத்திற்கு "ஜடம்" என்ற பெயர்மட்டுமே உண்டு. மனதிற்கு, எண்ணமும் உண்டு! அதனால் குணங்களும் உண்டு! "ஜடமாகிய" தூலம் கண்ணால் பார்ப்பதோ! காதால் கேட்பதோ! மூக்கால் நுகர்வதோ! வாயால் சுவைப்பதோ! பேசுவதோ! உடலாலும், குறியாலும், தொடுவதோ! நடப்பதும்! கொடுப்பதும்! வாங்குவதும்! அனைத்து, புண்ணியபாவ காரியங்களும் "மற்றும்" "மனம்" இயங்கி! "உடல்" செய்கிறதேயன்றி, உடல்தானே இயங்குவதில்லை! இயங்க இயலாது! ஆனால், மனம் சூட்சுமமாக இருந்து இயங்கிக் கொண்டு, அப் "பழிபாவங்களை" தூல உடல்மேல் போட்டுவிடுகிறது! உடல் ஏற்றே ஆக வேண்டும்!



உ (ௐ)

வெளிப் பார்வைக்கு, அனைவர்க்கும், மனம் தோன்றாமல், உடம்பும் தோன்றுவதால், அவ்வுடம்புக்கே இச்சிப்பும், ரசிப்பும்! இகழ்ச்சியும், புகழ்ச்சியும் கொடுக்கப் படுகிறது. அம்மனமானது, கண்டு கொள்ள முடியாமலும், அம்மனதை கண்டிக்கவோ, தண்டிக்கவோ, வெறுக்கவோ, இயலாத் தன்மையினால், அம்மனம், தன் இஷ்டத்திற்கு, ஓடி ஆடி விளையாடி, கர்மாவை பெருக்கி, அக்கர்ம பலத்தை, உடலிடம் கொடுத்து விட்டு, தான் இன்பமாய் இருக்கிறேன்.

எவனோ ஓர் "**நான்**" (பக்குவ ஆன்மா)

ஸ்ரீ ஸத்குரு மூலமாக, "உண்மையை உணர்ந்த தன்மையால், **மனதின்** குணமான, நான் என்றல், என்னுடையதை முழுமையாக விட்டொழித்து, எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதேஎன! சர்வார்ப்பணமாக, தம்மனதை, **அறிவு** பூர்வமாக விட்ட தன்மையினால், அறிவினிடமே, மனதின் ஆட்ட ஓட்ட பாட்ட விளையாட்டெல்லாம் ஒழிந்து, ஸ்ரீ ஸத்குருவின், ஆத்ம ஞான விசாரணை மூலமாக, மறைந்தாகிய மனமாகி, ஜீவன்முக்தி பெற்று விடுகிறேன்!



தூலம் அனுபவபாவனை! 
மனம் அனுபவ சுவை! ஆகவே
விளைவெருத்தும் மனதாலேயே நாகத்திறதும்

தூலகர்மாவின் ரகஸ்யம்: புண்ணிய பாப வினைகளை, செய்வது மனம். ஆனால், அதன் "பலனை" அனுபவிப்பது, தூலம்! மனமல்ல என்பதே ஸத்தியம்!

தண்டிப்போ! ரக்ஷிப்போ! உடல்தான், நம் கண் காணும் நிலையில் அனுபவிப்பதாக, தோற்றப்படுகிறது! ஆனால், அவ்வின்பத்தையும்! அத்துன்பத்தையும்! இந்தமாயாமனமானது "நான்/என்னுடை/எனது"! என, அஹங்கரித்து, அபிமானித்து ஏற்றுக் கொள்கிறது! இந்த அஹங்காரமும்! அபிமானமும்! மனதுடையதேயல்லாமல், உடலுடையதல்ல, என்பதே ஸத்தியம்!

இங்கு? "சூட்சுமமனம்" எண்ண வடிவில் (குணசொருபமாக) அஹங்கார அபிமானத்தோடு, ஏற்றுக் கொண்டு "புண்ணியபாபத்தை"யும், ஏற்றுக் கொள்கிறது! "தூலஉடல்" ஒன்றும் செய்ய இயலாத தன்மையால், மனதால், கொடுக்கப்படும் வினைகளையும், ஜனனமரணத்தையும், ஏற்றுக் கொள்கிறது! இங்கு மனதின் வலுவையும்! உடலின் இயலாமையையும் உணரலாம்!



மனமே செய்த வினையாகும்! ஆகவே
உடலோ அவ்வினையை முடிக்கும்
வினையாகும்!

"ஆட்டுக்" களிப்பது, மனம் ஆகும்.
"ஆடுக்" கழிப்பது, வினை உடலாகும்.
"ஆடவைத்து" இவை எவற்றிலும் பாரபக்ஷ தோஷம் இல்லாமல்,
சம்பந்தம் இல்லாமல், "சாட்சியாக"
இருப்பது, "விதி" தேவதையாகிய, ஸ்ரீபகவான் ஆகும்!

பாடல் 10.

10 "மனஜயம்" அதாவது மனம் மனத்தைக்காக்கும்
வரையில் "மனோவியாபாரம்" விடவேண்டும்!
மனோ வியாபாரம், விடுவது என்றால் — விநோதமாகவும்!
விசித்திரமாகவும்! விபரீதமாகவும்! விகல்பமாகவும்!
இவை அனைத்திலும், ஒட்டுமொத்தமான "குற்றம்
குறைகள்" பார்ப்பதில் குற்றம் கேட்பதி
லி குறை!
யும்! அது பற்றி பேசுவதில் "பேத" உணர்வுகளையும்!
தவிர்த்தால், மனோவியாபாரம் நாசமாகும்! இங்கு,
மனோ நாசமானால், "அறிவு" பிரகாசிக்கும்! அதாவது
ஸ்ரீபகவானின் நிலையை, நீ பெறமுடியும்! இங்கு ஸ்ரீபகவத்
சொரூபமான, அறிவு அதாவது "பரமாத்மாவே"
நாம் ஆனால் ஞானசூரியன் இருக்கும் இடத்தில்,
அஞ்ஞான இருள், எப்படி இருக்க முடியும்? என்கிறார் ரிபு.





பொருள்:— மனமே விருத்தியே, தூல விருத்தியாகும். இந்த தூல விருத்தியானது "நாமரூப" பொருள்களையும், உறவு, சுற்றம், நட்பு இவைகளையும் "எனது" என சொந்தம் கொண்டாடுவதால், பந்தமும், அப்பந்தத்தால், பாசமும், அப்பாசத்தால் பற்றும், அப்பற்றினால், புண்ணிய பாப வினைகளும், அப்புண்ணிய பாப வினைகளால், ஜனன மரண சுழற்சியும், அதுவே "சம்சார சாகரம்" என்றும், அதை கடக்கவும், சொல்லவும், ஒண்ணா துக்கபயம் என்றும், பேசப்படுகிறது. மேலே சொன்ன, மனமே தூல விருத்தியானது, மனமே "எண்ணத்தால்" தோற்றப்பட்டதென்று, அனுபவ ஞானிகளின் வாக்கும் மட்டும் உரையும், படி, ஒரு எண்ணத்தை, மற்றொரு எண்ணத்தால், கெடுக்கலாம் என்றும், பின் அவ் இரு எண்ணங்களையும், நானும் அல்லவென்றும், எனதல்லவென்றும், விட்டு அவ்வாறு எண்ணங்களையும், நாசம் செய்யலாம் என ஸ்ரீமஹான்கள் சொல்லக்கேள்வி.



உ

37

மனோநாச விருத்தியாகிய சம்சார எண்ணங்கள் வந்த விதமே! அனைத்தும் ஸ்ரீபகவான் பொருளாகவும்! அனைத்தும் ஸ்ரீபகவான் செயலாகவும் இருந்தாலும், நம் கவனக்குறைவாலும்! ஜகவாஸ தோஷ பழக்க வழக்க, கோரை குணங்களாலும், "நான்" என அஹங்கரித்தும்! "என்றும்" என அதிகாரம் செலுத்தியும்! "எனது" என அபிமானம் பாராட்டியும்! புண்ணியபாப வினைகளை "நாமேவலிய" தேடிக் கொண்டோம்! இத்தவறு "ஜீவ" தவறேயல்லாமல்! "ஈச" தவறு அல்லவே அல்ல! என்பதே ஸத்தியம்!

இத்தவறை போக்கவும், அறியாமை அகலவும், ஜீவன் முக்தி பெறவும், ஒரே வழி இதுதான்! இக்கலியுகத்தில் "வேறெந்தவழியும்" இல்லவே இல்லை, என்பதே ஸத்தியம் என குருநாதய மூன்று யுகங்களிலும், உள்ள ஸ்ரீமஹான்களின் வாக்கு இருக்கிறது.



உ



அந்த ஸத்திய வழி, இதுவொன்றே தான்
எல்லாம் அவன் செயல்! என்பதும்,
எல்லாம் அவன் பொருள்! என்பதும், அவனன்றி
அணுவும் அசையாது! என்பதும் ஸத்தியமானால்,
இச் ஜீவனுக்கு, "இருப்பும்" இல்லை! "இயக்கமும்" (எச் செயலும்) இல்லை! உடைமை உரிமை,
என்றநிலையில் "எப்பொருளும்" இல்லவே இல்லை!
என்பதே ஸத்தியம்! ஆதலால் இச் ஜீவனுக்கு, இருப்பும்!
இயக்கமும்! பொருள்களும்! உறவு, சுற்றம், நட்புகளும்!
~~இருப்பதாக~~
தோன்றுகிறதே என்றால்?
அஹங்காரமும், அதிகாரமும், ஆதிக்கமும், அடாவடி
த்தனமும். சொந்தம் கொண்டாடும், அபிமானமும்!
"தான் தோற்றுகிறதே" யன்றி
வேறொன்றுமில்லை, என்பதே ஸத்தியம்! இதுவே,
இச் ஜீவனின், "மறைவியாபாரம்"!
ஆகும். இவ் வியாபாரத்தை, இச்ஜீவன் ஜன்மஜன்மாந்திர
மாய் செய்து வருகிறான்! ஆனால் இச் ஜீவன் சலிப்படையவில்லை.

(39)



இ நாம ரூப உலகம், உன்னை ஒதுக்கிறவன்றி, ஸ்ரீபகவான், உன்னை ஒதுக்க மாட்டான் என்பதே ஸத்தியம்.

காரணம்:- துன்பத்தையே இன்பமாக சுவைக்கிறேன். இன்பமும் துன்பமும் ஒன்றே ஓர் ஜீவன் உணர்ந்து, இதை விடுவதற்கு ஆற்று, முயற்சி செய்தாலும்! "சகபாடிகள்" என்ற, சகவர்பாடிகள் தொற்று நோய், கிருமி போன்றவர்கள் விடுவதில்லை. திரும்ப திரும்ப இவனை இழுத்துக் கொண்டிருக்கின்றனர்! மேயும் மாட்டை, வந்த மாடு கெடுப்பது போல்! கெடுத்துக் கொண்டே இருக்கின்றனர். அப்படி கெடுக்க வேண்டும் என்பதே! "விதி" அதுவே "நியதி" இதனாலே, அனேக சாதகர்களுக்கு, இவ்வனுபவமானது "சான்றோர் முழக்கம்" என்னும், கதையாக இருக்கிறது என ஸ்ரீமஹான்கள் சொல்வர். காரணம், இக்கலியுகத்தில், "வழி" காட்டிகள் சரியில்லை என்பதும், பேருண்மையாகும்! அஹங்காரத்தையும், அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும், அபிமானத்தையும், விட்டால் வாழவழி கிட்டும் என பயமுறுத்தவும். அதன்படி அனுபவம் ஒத்து வருகிறது! உலகையும்! உறவையும்! நாட்டி மனம் பயமுறுத்துகிறது.



40

உ உன்னை ஸ்ரீபகவான், ஏற்றுக் கொண்டால், அந்த நாமரூப ஜகம், இல்லா தொழியும்! இது இந்த ஏற்பின் அநுபவம்.

நாம் வாழ வரவில்லை! என்றும், நாம் (மௌனம்) "சாகவே" வந்தோம்!!

என, இறை குரு உணர்வில் நம்பிக்கையும்! இவ்வுலகம் தேவை இல்லை என்ற வைராக்கியமும்!! கொண்ட "தீரனே" உடல் உலக வியாபாரத்தை ஒழிக்க முடியும்! அவனே ஒழித்து விட்டான் என நம்பு! இவனே மறு வியாபாரத்தை, ஒழித்து! மனோ ஜயம் பெற்றவனாவான்!

"நான்! எனது! எனை" விட்டொழித்து, விட்ட நிலையில் எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!!! என்ற சர்வசங்க பரித்தியாகியே "அறிவு" ஸ்ரீபகவானை சொரூபமாக பிரகாசிப்பான். அதே ஸ்ரீபகவான் கருணையாலும், ஸ்ரீ ஸத்குரு கிருபையினாலும்! அவனே "பேரவாக" மாறி! பரமாத்ம நிலையிலிருந்து பரம் பிரம்ம நிலையாகிய அதுவே நாம் என பெறமுடியும்!



பழி என்பது சொல்!
பாபம் என்பது செயல்!
ஏவ்வாம் நீயே! என உணர்ந்தால்
இவ்விரண்டும், தாமே மறையும்!



பாடல் 26.

# (11) "தனது மன முயற்சி"

இறை பக்தியும் சாத்தியமாகும்! ஞானமும் சாத்தியமாகும்! தனது மன முயற்சியால், மனோஜயம் உண்டாகும்! பர உணர்வு எளிதில் சாத்தியமாகும்! துக்கம், துயரம், கஷ்டம், கவலை நீங்கும்! சுகமாகும் சுபந்திறக்கும் சுபமாக்கும்! அதி அதி "சுபம்" ஆகும்! "ஜனன மரணத்தை" எளிதில் ஜயிக்கலாம்!

பொருள்:— இந்த இருபத்தி ஆறாவது பாடலின் சிறப்பு. மேலே கூறிய அனைத்தும், வெகு எளிதில் சாத்தியமாகும் "தனது மன முயற்சி"!

லௌகீக தர்மம்:

(1) சம்சார சாகரத்தில், உழலும் ஓர் ஜீவனுக்கு முன் பலபல மடல்களில், கூறியபடி, "இல்லற தர்மத்தை"! ஆண்கள் அவர்கள் நியதியிலும், பெண்கள் அவர்கள் நியதியிலும், குழந்தைகள் அவர்கள் நியதியிலும், "தாம் தமக்குள்" அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும்

உலகம் உன்னை வாழ வைக்கவும், வழி வகுக்கும்! இங்கு நீ எண்ணம், சொல், செயலால் அடங்கும் போது,



இ ஸ்ரீபகவான் உன்னைப் பற்றுவதையே, உலகம் உன்னை வாழவைக்கும் என்றும், உன்னுள் அடங்கும் என்றும், உபசார வசனமாக, சொல்லப்படுகிறது! (௪௨)

உன்னிடம் வேகம் இல்லை! வீரம் இல்லை! உக்ரம் இல்லை! சுறுசுறுப்பில்லை என்ற நிலையில், இவ்வுலகம் உன்னை "விட்டுவிடும்!" இவ்வுலக வழியமே, அடங்க மறுப்போம்! அத்து மீறுவோம்! ஆகும்.

இவை உன்னிடம், இல்லாத தன்மையினால், இவ்வுலகம் உன்னை ஏற்காது! உன்னை ஏற்க முடியாது! உன்னை ஏற்க இயலாது! இங்கு ஒன்று விட்டால், ஒன்று பற்றும்! என்ற நிலையில், இவ்வுலகம், உன்னை விட்ட மறுகணம், ஸ்ரீபகவான் "பற்றையே" ஆகவேண்டும்! அதுவே விதி! அதுவே நியதி!

இங்கு இவ்வற தர்மத்தை, கடைப்பிடிக்க வேண்டியது, தனது மன முயற்சியாகும்!

② முன் சொன்ன, இவ்வற தர்மத்தை, தனது மன முயற்சியினால், பற்றிய ஜீவனானவன், ஓர் பக்குவ ஜீவன், நிலையை பெறுகிறான்! இவ்வற தர்மத்தின், அடுத்தபடியாகிய, "தெய்வீக" தர்மத்தையும், தனது மன முயற்சியினால் தான் பற்றவேண்டும்!



உ

பணிவிடை:- நீ முதலில் பணியைக் கற்றுக் கொள், அதன் விடையானது, உன்னை தேடி வரும். (47)

தெய்வீக தர்மம்:- "ஸ்ரீ பகவான்" நாம ஸ்மரணையுடன், எல்லாம் அவன் பொருளே, எல்லாம் அவன் செயலே, என்ற நிலையில் நான், என்னுடையது, எனது, விட்ட நிலையில், வினையின்படி தான தர்மம், அதிதி சேவை, அதிதி ஸத்காரம், உள்ளம் உருகி, கண்ணீர் பெருகும் பக்தி, ஸ்ரீ பகவானை அடைவதே, லட்சியம், வாழ்க்கை வாழ வரவில்லை, என்ற திட வைராக்கியத்துடன், உடல் உலகை விட்ட நிலையும், ஸ்ரீ பகவானை, தேடும் நிலையும், "ஸத்குரு" நாட்டமும், தேட்டமும், உண்டாகி, பணிபுரியும் காலை, இவனுடைய உபாசனா மூர்த்தியே, ஓர் "ஸத்குருவாய்" வரவேண்டும். அல்லது, ஓர் ஸத்குருவை காட்டவேண்டும். இது "பர" கருணை நிலையாகும். இங்கு ஸத்குரு நாதருக்கு, தம் உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும், "எல்லாம் நீயே", என சர்வார்ப்பணமாக விடும் நிலையும், தனது மனமுயற்சியே ஆகும்.



உ

அமைதி! சாந்தி! அதன்
ஆனந்தம் வேண்டுமா?
வார்த்தையை குறை! (Mm)

இவ்விரு நிலைகளிலும், பரிபூரண சரணாகதி நிலையில்! சர்வார்ப்பணம் செய்வது, தனது மனமுயற்சியே ஆகும்! "உன் சாதனை" சரணாகதி என்ற சர்வார்ப்பணமானது சாதனை என்று சொல்ல முடியாது! சொல்லக் கூடாது! காரணம் என் செயலாவது ஒன்றுமில்லை! இனி எதுவுமே! எல்லாம் உன் செயலே என, "சும்மா" இருக்கிறோம்! என "விட்டநிலை" ஆகும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்! விடுவதும், ஓர் சாதனை தானே, எனக் கேட்கலாம்! இல்லவே இல்லை. எப்படி என்றால்? இன்பமோ துன்பமோ! லாபமோ நஷ்டமோ! சுகமோ துக்கமோ! புண்ணியமோ பாபமோ! நன்மையோ தீமையோ "ஆக்கமோ, அழிவோ!" இது, எமக்கில்லை! இனி சம்பந்தம் நாமரூப, உடல் உலக, ஜீவ சம்பந்தத்திற்கே யாகும்! யாமோ "விருப்பு அழிவில்லாதவன்" என சந்தேக, கலக்க பயமின்றி குத்துக்கல்லைப் போலும் பட்டமரம் போலும் "மன அசைவற்றிருப்பதே" விட்டநிலையில், சும்மா இருப்பதாகும்!



உ

குற்றம் என்பது, செயலில் தோற்றும்! குறை என்பது, வாக்கில் தோற்றும்! (45)
எல்லாம் நலமேஎன ஒன்றில், இவ்விரண்டும் தாமே மறையும்!

மனமே எண்ணம்! எண்ணமே மனமாகும்! இம்மனதை நாமரூப ஜகத்தில் விடுவது, மனோபாரம் ஆகும்! இம்மனதை, ஸ்ரீபகவானிடம் ஆரம்ப நிலையிலும், அடுத்த நிலையில் ஸ்ரீஸத்குருநாதனிடமும்! முன் சொன்ன நிலைகளில் "எல்லாம் நலமே!" என விடுவது, தனது மன முயற்சியாகும்! ஸ்ரீபகவானிடம் விடும்போது, புண்ணியபாபம் நசிக்கிறது! ஸ்ரீஸத்குருநாதரிடம், விடும்போது, மனோநாசம் ஆகிறது! இங்கு இது, தனது மனோ முயற்சி யென பேசப்படுகிறது! ஆனால் இம் முயற்சியால், மனோநாசம் ஆகி மனம் மனமற்றதாகி, வெளாக்கமும்! தெய்வீகமும்! "வெய்யிலின் மஞ்சள்!" எனகில்லாமல் மறைந்துவிட, அங்கு காலாதீத ஒன்றே சுதமாக ஆனந்தமாக இருக்க, அதுவே நாமாகி இருப்போம். இத்தனது மன முயற்சி, எளிதினும் எளிதாகும்! துக்கம் துயரம், கஷ்டநஷ்டம், கவலை பயம், அவஸ்யம் நீங்கும்! சுபமே பிரம்மானந்தமாக மாறும்! அதி சுலபமாகும்! ஜனனமரணமற்ற ஜீவன் முக்தி இதுவே யாகும்! தனது மன முயற்சி என்பது எந்த சாதனையும் அல்ல! வினையால் வரும் சோதனையையும் வேதனையையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு "எல்லாம் நலமே" என, நாம் அடங்கி இருப்பது தனது மன முயற்சியாகும்!



ஸ்ரீ பகவான், உன்னை பற்றும் நிலைக்கு, நீ ஆளாகிக் கொள். உன்னிடம், ஒன்றேனும் இருந்தால், அவன் உன்னைப் பற்ற மாட்டான்! பற்ற முடியாது பற்ற இயலாது! இவ்வுலகில் உனக்கென எதுவுமே இல்லாத, வெறும் பயல்! ஆகிவிட வேண்டும்! அதுவே சர்வார்ப்பணம் என்ற, பரிபூரண சரணாகதி!

தனது மன முயற்சி:- நான் அல்ல! நீயே!

" " " :- என்றல் அல்ல! உன்றல்!

" " " :- எனது அல்ல! உனதே!

" " " :- பார்ப்பதிலும்! கேட்பதிலும்! எல்லாம் நன்மையே! என, அடங்கி இருப்பதாகும்!

தனது மன முயற்சி:- எல்லாம் ஒன்றே! அது நாமே! நாமே எல்லாம்! என்ற நிலையில், அகம் பிரம்மம்! ஜெகம் பிரம்மம் அகமே எல்லாம்! என, எந்த பிரவர்த்தியும், இல்லாத நிலை!

" " " :- பாடம் படிப்பு இல்லாத நிலை!

" " " :- சாதனைகளை படிப்படியாக விடும் நிலை!

" " " :- சோதனைகளையும்! வேதனைகளையும்! **"வெறுமையாக"** ஒன்றும் நிலை!

தனது மன முயற்சி:- அனைத்து நாம ரூபங்களையும். நானும் அல்ல! நம்முடையதும் அல்ல! நாம் அந்த ஒன்றே என, சும்மாவே சுகமாக இருக்கும் நிலையாகும்!



பாடல் ௪௮.

**12** அகம்பிரம்மம்! பிரம்மம் அகம்! "**நாமே அது, அதுவே**"

**நாம்**! என்ற பிரம்மாண்ம பாவனையை, செய்வதில், எந்த "**வருத்தமும்**" இல்லவே இல்லை! ஆனாலும், மிக மிக வருத்தம் இருப்பதைப் போலும்! அதி அதி கடினம் இருப்பதைப் போலும் "**வழுவுற்ற மாபாவி**" மனதினில், தோன்றுகிறது என்றும், "**விமல**" மனம் உடையவர்க்கு, மிக, மிக, மிக, "**எளிதே**" என்றும், யாம் சொல்லும் முறைப்படி, செய்யும் போது, "**நம்**" ஸ்ரீ பகவான் கருணையால், "**திடஞானம்**" சித்தித்து, ஜீவன் முக்தியும், பெறுவாய் என்கிறார் எம் பிரபு!

பொருள்:— பிரம்மாண்ம பாவனை செய்வதில், கடினமோ வருத்தமோ! இல்லவே இல்லை! காரணம், இந்த பிரம்மாண்ம பாவனையில், ஜபதபங்களோ! மந்திர, தந்திர, யந்திர கடினங்களோ! ஆஞா விதி முறைகளோ! மடி ஆச்சார அனுஷ்டான கட்டுப்பாட்டு முறைகளோ! யோகானுஷ்டானங்களோ! அஷ்டசித்திகளோ! சர்வ வல்லப சக்திகளோ! எ யாக யாகங்களோ! மற்றும் எவ்விதமான "**கிரியைகளோ**!" (கடின கர்மாக்களோ)



இ

சாட்சி பாவனை என்றால்? (48)
அனைத்தையும், ஸ்ரீ பகவான்
பொருளாகவும். அவன் செயலாகவும்
அவனன்றி அணுவும் அசையாது என்று
திட உணர்வே, சாட்சி பாவனையாகும்!

"ப்ரார்த்தயின்"

நிமித்தம், அனைத்து கர்மாக்களோ!
"மனோபாரம்" ஏதும், எந்த கடினமும்,
வருத்தும் வருத்தமோ! இல்லவே இல்லை! இதுவே,
பிரமாண உண்மையாகும்!
இங்கு "சாட்சி பாவனையே" ஆகும்!
இதில் அனைத்தும் அவனாகவும்! அவன் பொருளாகவும்!
அவன் செயலாகவும்! அவனன்றி அணுவும் அசையாது!
என்ற உண்மையின், "திட" உணர்வுடன் கூடி
இருக்கும், சாந்தியையும், அமைதியையும்,
அதனைப் பெறும், ஆனந்தத்தையும் தான், சாதனையாக
கொண்டு, "மனோபாரம்" இறக்கும் நிலையையே,
ஸ்ரீ மஹான்கள் குறிப்பிடுகிறார்கள்!
அந்த நிலையில், அதுவே நாம் என்றும், நாமே அது என்றும்,
"சொல்அற சும்மா இரு!"

(49)



சும்மா இரு என்றால்?
வாக்கை மௌனமாக்கி,
செயலை சோம்பு குணமில்லா,
ஆனந்தம் ஆக்கி, எல்லாம் ஒன்றே!
அது நானே! நானே அது! என அடங்குவதாகும்!
எனவும் நான், சொல்கின்றேன்.

இதன் உண்மை எப்படி இருக்கிறது என்றால்?
"எல்லாம் அவனே" என ஆன பிறகு:- உனக்கு இருப்பும், இயக்கமும், பொருள்களும் இல்லை என்பதே சத்தியம்! அந்நிலை சத்தியமானால் நான்! என்னால்! என்னுடையது! என்ற நிலையில் கணவன், மனைவி, மக்கள், உறவு, சுற்றம், நட்பு, இவைகளினால் நீ பெறும் "மோகம்" அதை அனுபவிக்கும், "போகம்" இவைகளுக்கு இருப்பே இல்லாமல் போய்விடும். போய் விட்டது என, வைத்துக் கொள். காரணம், அவரவர் வினையின்படி, திட்டமிட்ட காரியங்கள், திட்டமிட்டபடி, ஒழுங்காகவும், "இயல்பாகவும்" நடந்து கொண்டிருக்கும்போது. "நான்" "நான்"! என ஏன், முந்திரிக் கொட்டையைப் போல் முட்டி மோதி, மண்டை உடைந்தும், "என்னால் என்னால்"! என எகிறிக் குதித்து, காலை ஒடித்துக் கொண்டு.



சஞ்சலம்:— துக்கத்தையே, எண்ணி எண்ணி, கவலை பயதுக்கத்தை, உண்டு பண்ணி, சலிப்படைகின்ற, தன்மையே அவஸ்தை!

வருத்தமும்! மனோபாரமும்! இடையறாத, "சஞ்சலமும்" ஏன் அடக்கிக் கொள்ள வேண்டும்?

இந்த நிலையானது, "வழுவற்ற" மஹாபாபி மனதுடையதால்!

வழுவற்ற மஹாபாபி மனம்:— ஸ்ரீ பகவானையும்! ஸ்ரீ பகவன் நாமாவையும்! "முழுமையாக" மறந்தும் அவனை நம்பாததே, காரணம் ஆகும்! அடுத்ததாக:— நானே செய்தேன்! என்றல்தான் முடிந்தது! இவை அனைத்தும் என்னுடையதே! என்ற அஹங்கார மமகாரத்தால், திக்கு தெரியாத காட்டினுள் புகுந்து, திரும்ப, திரும்ப! "உழன்று சுழன்று" ஓர் அவிவேகியாய், ஜனனமரணக் காட்டினுள்ளேயே திரிந்துகொண்டிருக்கிறான்! அதனால்தான் திரும்ப திரும்ப, வழுக்கி, வழுக்கி, வழுக்கி, வழுக்கி, வழுக்கி, விழுந்து, எழுந்து! விழுந்து, எழுந்து! "வீண்" அவஸ்தையை, தனக்குத்தானே, உண்டுபண்ணிக் கொள்வதாலேயே, சஞ்சலத்தை இவன் விடுவதும் இல்லை, இவனை, சஞ்சலம், விடுவதாயும் இல்லையென்பதே உண்மையும்!



உ

"மேலும் அந்த பிரம்மாண்ட பாவனையானது,
"மலமற்ற" அதாவது "ஆணவம்! கன்மம்! மாயை!
என்ற மும்மலமும், ஒழிந்த மனதில், திட
ஞானம், எளிதாய் பிரகாசிக்கும்! இதே இதழில், மும்
மலம் பற்றிய, விளக்கம் இருக்கிறது!

மேலும் ஸ்ரீபகவான் "கருணையிறைவன்"
"திடஞானம்" திகழும் என்கிறார்!

கர்மா சம்பந்த "உடல் உலக!"
வாஸனைகளும்! அவ்வாஸனையின், வாதனைகளும்!
அதாவது, "மலை" உபாதைகளும், நீங்கிறவன்றி,
திடஞானம் பிரகாசிக்காது, என்பதே ஸத்தியம்!
மண்ணும், ஜலமும், இணைந்து பிணைந்ததான, உடல்
புண்ணிய பாபம் எம் மூழ்ந்தியிறலும், மேலே செல்வதிலிரு
ஆனால் "மனம்" மேல் நோக்கி அதாவது
மறைத்தால்தான், முக்தி உண்டு!

மண்ணான உடல், ஸ்ரீபகவானுக்கு என்றும்,
ஸ்ரீ ஸத்குரு உபதேசம், மனதுக்கு என்றும், வைத்தால்
ஸ்ரீபகவானுக்கு வினை உடல் என்றும், ஸ்ரீ ஸத்குரு தேவருக்கு, தான்
மனம் என்றும், பரிந்து கொடுத்த நிலையில், நாம் சுபமாக
இருப்போம்! இருக்கிறோம்!



பாடல் ௧௩

13 வேண்டாத கல்வியை, கற்காதே! கற்க வேண்டிய, கல்வியை கல்! தன்னை அறியும், அறிவுள்ள கல்வியை கல்! அதுவே, ஆத்ம ஞானம், என்ற பிரம்ம ஞானம்! அதுவே, "பயபீதியை" போக்கும் "பரிபூரணத்துவத்தை" கொடுக்கும்! மற்றும் அனைத்து பாடம், படிப்பும், கலக்க பயத்தை கொடுத்து "ஜனன மரணத்தை" கொடுக்கும்!

பொருள்:— இன்றைய கலியுக, கல்வி என்பது, கல்வியல்ல! அது பாடம் படிப்பு! என்ற நிலையில், "போட்டி & பொறாமை" என்ற நிலையில், பட்டம்! பதவி! பேர்! புகழ்! பணம்! கௌரவம்! இவைகளில், வசதியான வாழ்க்கை, என ஏமாற்றி லோஹ, மோஹ, ரோகம், இவைகளுடன், அமைதியற்ற கலியுக, நாகரீக, ஆடம்பர, இன்பத்தை, அதாவது "துன்பத்தை" கொடுத்து, அதையே இன்பமாக மயக்கும்! அதுவே அரிப்பெடுக்கின்ற, படையை சொரிந்து, ரணமாக்கி, அழிவை (ஜனன மரணத்தை) உண்டு பண்ணக்கூடியதே, பாடமும் படிப்பும் ஆகும்!



உ

எண்ணமே உலகம்!
எண்ணமற்றிருப்பதே,
மோக்ஷம்! குற்ற உணர்வற்ற
கற்பனையை கெடு! எண்ணத்தை
குறை! வாக்கே வாழ்க்கையாகவும்
பயமாகவும் முடியும்!

(53)

"கல்வி" குற்றம் குறை நீங்கிக் கல்வி!
,, ,, நீங்கக் கல்வி!
,, ,, தோற்றமல் கல்வி!

என மூன்று விதம் என, அனுபவ ஞானிகள் கூறுவர்!

(A) நீங்கிக் கல்:- குற்றம் குறை தோற்றுவதை, "மறந்து/மன்னிப்பது" ஆகும்!

(B) நீங்கக் கல்:- குற்றம் குறை, தோற்றும் போது, நீ "விட்டுக்கொடுத்து" விலகுவதாகும்! அவனை "விலகு" என, சொல்லாதிருப்பதாகும்!

(C) தோற்றமலிருக்க கல்:- குற்றம் குறை, தோற்றும் முன்பே, "இறை குரு" உணர்வோடு, எல்லாம் "அவன் செயல்" என, நம் எண்ணம் சொல் செயலால், "அடங்கி" இருத்தல் ஆகும்!

இப்படி மூன்று நிலைகளிலும், நாம் அடங்கி இருப்பதே, "அனுபவ" கல்வியாகும்!

சங்கல்பமே உலகம்! சங்கல்ப ரஹிதமே மோக்ஷம்!
சங்கல்ப விகல்பங்களை கெடு! பயமே பலிதம்!
எண்ணமே வாழ்க்கை! வாக்கே வாழ்க்கை! என்றும்,
ஸ்ரீ மஹான்களின், ஸத்திய அனுபவ வாசகம் இருப்பதால்,



உ

இவைகளை, கருத்தில் கொண்டு, ஒரே வகை கல்வியாகும்! ஒவ்வொருவனும், இன்ப துன்ப வாழ்வுக்கும்! அதனால் வினையும், "ஸம்ஸ" ஜனன மரணத்தில், சுழலவும்! பிறவா நிலையாகிய, ஜீவன் முக்தி பெறவே, வந்தோம் என்று "பர" உணர்வோடு கூடி நிஷ்காம்ய கர்மாவும்! நிஷ்காம்ய பக்தியும்! பண்ணி, "ஸத்குரு" பக்தியும்! அவர் சேவையும்! ஏற்றுக் கொண்டு, "ஸத்தாக" சாதனை செய்வதே, "கற்கும் கல்வி" ஆகும் என, அனுபவ ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஸ்ரீ பகவான் கருணை யினாலும்! இங்கு ஸ்ரீ ஸத்குரு கிருபை யினாலும்! "வினை" யும்! "மனமும்" இயல்பாக முடிந்து விட்டால், "பவபீதி" என்ற ஸம்ஸார ஸாகரம் என்ற, கடவானது! இக்கல்வியின் சாதனையாளனுக்கு, ஓர் "பசுவின்" குளம்படி (ஓர் பசுவின் குளம்படி பள்ளத்தில் எவ்வளவு ஜலம் உண்டோ அந்த அளவாகி விடும்) போன்று ஆகிவிடும். என்று அனுபவ ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேட்டு வியப்படுகிறோம்!

கற்பனைக் கற்றால், ஜீவன் முக்தி உண்டு!
வேண்டாதனை படித்தால், ஜனன மரணம் உண்டு!



உ

பாடல் 30.

14 அக்காலாதீத, ஒன்று, கறையற்ற "எல்லை" இல்லாத ஒன்றும்! நீ கண்ணால் காண்கின்ற! காதுகளால் கேட்கின்ற! "நாமரூப" காட்சியும் அல்ல! இயற்கையின் "ஒலி" யோ! செயற்கையின் (வாக்கின்) "ஓசை" களோ! இல்லவே இல்லை! எங்கும் பரிபூரணமாக, நிறைந்து இருக்கின்ற, ஒன்றும்! காட்சியின் நினைப்பும்! ஒலி, ஓசை, களின், எண்ணங்களின் "மறதியும்" இல்லவே இல்லை! அவ்வொன்றை, மறைக்கும் எந்த "திரையும்" (மாயாவின் மறையோ! மனதின் திரையோ) இல்லாத, பிரத்தியட்சமாகியும், ஸ்வயம் "அகண்ட பேரொளியாயும்!" அந்த ஒன்றே ஸத்தியம்! "போக்குவரவு" உள்ள, எவையும் இல்லவே இல்லை! அந்த "குறைவில்லாத" பரம்பிரம்மம், வேறு எங்கும் இல்லை! அனைத்துமாய் "எல்லாமாய்" அந்த ஒன்றே இருக்கிறது! அதுவே நாமாகவும்! நாமே அதுவாகவும்! இருக்கிறோம் என, பூரண நிறைவு கொள்வோம்!



உ



பொருள்:- வளர்வு, தேய்வு, மறைப்பு, தெரிவு, இங்கு இருக்கிறது என்றும், இங்கு இல்லை என்றும், வந்தது, இருந்தது, மறைந்தது என்றும், இன்னதை செய்தது என்றும், செய்வித்தது என்றும், வாக்காலோ, வரியாலோ, சொல்லவொண்ணா, விளக்கவொண்ணா, அந்த "ஒன்றை" ஊசிநாட்ட இடமில்லாமல் இருக்கிறதென, அனுபவ ஸ்ரீமான்கள், கூறுவர். ஊசிநாட்ட இடமில்லை என்றால், அதன் பொருள்? (இதில் சொல்வது உதாரணமே தவிர, உண்மையல்ல)

(1) ஆற்றங்கரை மண்ணோ, சமுத்திரக்கரை "மண்ணோ", பாலைவன "மண்ணோ", எப்படி, இடைவெளி இல்லாமல், நிறைவாக இருக்கிறதோ? அதைப் போல, கடல் என்றும், சமுத்திரம் என்றும் கூறும் பெரிய "நீர்ப்பரப்பு" எப்படி, இடைவெளி இல்லாமல், நிறைவாக இருக்கிறதோ? அதே போல, "வாயு" எப்படி, இடைவெளி இல்லாமல், நிறைவாக இருக்கிறதோ? அதைப் போல, "ஆகாயம்" எப்படி, இடைவெளி இல்லாமல், நிறைவாக இருக்கிறதோ? இதே நிலையில், இடைவெளி இல்லாமல்



உ

(57)

எங்கும் "நீக்கமற நிறை
ந்திருக்கிறதென!" பொருள்
கொள்ளலாம் என்று ஸ்ரீமஹான்கள் சொல்லக்,
கேள்விப்படுகிறோம்!
இது "உவமானமே" தவிர உண்மையல்ல!
இவர்கள் கொடுக்கும், இந்த உதாரணங்களில்,
மண்! நீர்! வாயு! ஆகாயம்! ஆகிய இந்த நான்கை,
"நீக்" கண்டு, உணர வேண்டும்! அதாவது?
(உ) மண்ணிலும் "சிறிய" இடைவெளி உண்டு!
ஜலத்திலும், "அணு" பிரமாண இடைவெளி உண்டு!
வாயுவிலும் அணுவுக்கும், "அணுவான
ஆகாஸ்" ஆகாயத்தில்
இடைவெளி உண்டு!
"அணுப்" பிரமாணமாவது, இடைவெளி,
இல்லையென்பதே, ஸத்தியம்! மண், ஜலம், காற்று,
இம்மூன்றையும், ஊசி நாட்ட இடம் இல்லாமல்
நீக்கமற நிறைந்திருக்கிறதென



உ

(58)

வாக்கிய விளக்கத்திற்காக,
சொல்லலாம். அதை "விளங்க" வைக்கவும் முடியும்!

3) ஆனால்? ஆகாயத்தை, எவராலும் விளங்க வைக்கவும் முடியாது! விளக்கவும் இயலாது, என ஸ்ரீமஹான்கள், பிரமாணமாகச் சொல்லுவார்கள்!

4) அதன் காரணம்? அது "யோகமாயா" ஆகும்! அது (ஆகாயம்) இருப்பதைப் போல் தோற்றும்! ஆனால் "இருப்பு" இல்லாதது! ஓர் பழமொழி உண்டு:— மண்ணுக்குள் மயிராண்டி! அதை உரிக்க உரிக்க, தோலாண்டி! (இது வெங்காயம் அதுவே மயிர்) வெங்காயத்தின் மயிர் போன்ற வேர் உண்டு. ஆனால் அதை, உரித்தால் தோல்தான் தோற்றுமே தவிர வெங்காயம் தோற்றுவதில்லை! அக்கதையைப் போல், (வெங்காயம் போன்று) "ஆகாயம்" என ஒன்று, இருப்பதைப் போல் தோற்றும். அங்கு அதைச் சோதித்தால் ஒன்றுமில்லை என்று ஆகிவிடும்!



உதாரண நியாயம்:— (59)

பிரம்மந்திரு ஆகாயம்
ஓர் மறைப்பே! இதை வேறறிவால்
நான் உரை முடியும்!
கருவி கரணங்களால் காணவோ,
உரைவோ, முடியா தென்பதே ஸத்தியம்!
ஊசி நாட்ட இடமில்லாமல்,
(5) நீக்கமற நிறைந்திருக்கிறது
என்றால், அதற்கு, ஆகாயமே பொருந்தும்!

(6) அக்காலாதீத ஒன்றை! அகண்டப் பேரொளி(யான)!
அதை, வாக்காலவோ, வழியாலவோ, வேறெதனாலும்,
விளக்க முடியாத ஒன்றாகும். அதை, ஆகாயம்
என்ற யோக மாயா, மறைத்திருக்கிறதென்பதே,
உண்மை! (பரத்தை)
இங்கு, ஓர் கேள்வி எழுவாம்? அதை மறைப்பில்
வாரது எனக் கூறும் நாங்கள், இங்கு ஆகாயம், அதை
மறைத்திருக்கிறது, எனச் சொல்லும், காரணம் என்ன?
எனக் கேட்கலாம்?

கொழுந்தே! நீயோ யுக்தி பூர்வமானவன்!
அதாவது யுக்திசாலியே தவிர "அறிவாளி"
இல்லை எனச், சொல்வதற்கில்லை அறிவாளி
இன்னமும் ஆகவில்லை. அறிவாளி ஆகிவிடுவாய்!
யாம் சொல்லும், கதை யுக்தி சாலிகளுக்கே. அறிவாளிக்கல்ல
இது மெய்க்கு "பொய்யான" விளக்கந்தான். 17



மணியே பிரம்மம்! (60)

பதரே யோகமாயா என்ற ஆகாயம்!

பதரை இல்லையென ஊதிரவ்,

பதர் பறந்து, மறைந்துவிடும்!

நிலையாய் நித்தியமாய், ஸத்தியமாய்,

# மணி

உண்டென்பதே மஹான்கள் அனுபவம்!

(7) ஸ்ரீ மஹான்களின், ஸ்வய அனுபவ

இது உதாரணமே "ஸத்தியவாசகம்!"

எதுவென்றால் :- ஆகாயம் என்ற, யோகமாயா,

தோற்றும் பரியந்தம்! "அகண்டப்"

பேரொளி தோற்றது!

அகண்டப் பேரொளி, தோற்றி விட்டால் அங்கு

யோகமாயா எனக்கூறும், "ஆகாயம்" தோற்றது.

இது அனுபவ ஸ்ரீ மஹான்களின் வாக்கே! இந்த

ஏழையின், ஸ்வய அனுபவமும் ஆகும்!

பாடல் 30ன், வாக்கியத்தை, இத்துடன் முடிக்கிறேன்!

(15) பாடல் 36, 37, 38!

நமக்கு அன்னியம், எதுவும், எங்கும், இல்லை

என்ற, "அகண்ட" விருத்தி, அடைந்தவன் எவனோ,

அவனே "திடஞானி" அவன் திரிலோகத்திலும், ஒருவனே!

அவன் சமாதி, நிஷ்டா சாதனம், அற்றவன்!

அவனிடம், ஸங்கல்ப விகல்பங்கள், இருப்பதில்லை.

அவன் பட்டமரம் போலும், குந்துக்கல்லைப் போலும்! இருப்பான்!



உ

அவன் "பாயும் ஜலமும்" கலப்பது போல், கலந்து "வேறு" பாடு இல்லாமல் (பேதம் இல்லாமல்) ஆனந்த பரனாய், இருப்பான்! அவன் நிலையை, திரிகர்த்தாக்களாலும், சொல்லவோ! விளக்கவோ! முடியாது என முடிக்கிறார்!

பொருள்:— அன்னியம் இல்லை என்றால்?

ஜக, ஜீவகோடிகள், ஈஸ்வராதிகள், மற்றும், "ஜடபாங்கள்!" மற்றும் அனைத்து சூரிய சந்திராதி அனைத்து கோள்களும்! "எல்லாமும்" கூட, "ஒட்டுமொத்த நாமரூபமாக!" அதாவது எந்த பெயருடனும்; எந்த உருவத்துடனும், இல்லை என்பதே, ஸத்தியம் என்றும்; மேலே கூறிய எல்லாமும், காலாந்த, பரசொரூபமாகவே இருக்கிறது என்றும், அதாவது, "மேலே கூறிய எல்லாமும் மண் பாண்டங்கள்" ஆகும். அம்மண்பாண்டங்கள், பரமாகிய "மண்ணை" அயலாக இல்லை என்றும், ஆனால் அப்பரமாகிய மண்ணில், அப்பாண்டங்கள், இல்லை என்பதே ஸத்தியம் என்றும், அப்பரத்திற்கு, "பாழும்"



பரமும் ஒன்றே! ஸ்ரீபகவானும் ஒருவனே!
உண்மைபக்தனும் ஒருவனே! (62)
உணர்ந்த ஞானியும் ஒருவனே!
அறியாமையின் அஞ்ஞானியும்
ஒருவனே! அனைத்து ஜீவ கோடிகளும்
ஜடசடப்பட வகைகளும் ஒன்றே! இப்படி
அனைத்தையும் ஒன்றுபடுத்துவதே அத்வைத சிறப்பு!

அன்னியமில்லை என்றும். எமக்கு
அப்பரம், அன்னியமில்லை என்றும்.
**யாமே** எங்குமாய் எல்லாமாய் இருக்கிறோம்! என்றும்;
"**எல்லாமாய்**" யாமே இருக்கிறோம்! என்றும்.
"**அகண்ட பரபாவனை**" உடையவனே,
"**திடஞானி**" என்றும், அவன் திரி
போகத்திலும், "**ஒருவனே**" என்றும்.
அனுபவ ஞானிகள், கூறுகின்றனர். இங்கு ஓர்
கேள்வி எழுவாம்! அதாவது, மற்றும், ஆத்ம ஞானி
இருந்தால், அவர்கள் என்றவது?
அவர்களை ஆத்ம ஞானி, இல்லையெனத் தள்ளிவிடுவதா?
இது சற்று, குழப்பமாக இருக்கிறதே என, எம்
செல்வங்கள், கேட்பதை உணர்கிறோம்.
"**இதை உணரவும்**"!!!
பரமும் ஒன்றே! ஸ்ரீபகவானும் ஒருவனே! உண்மை
பக்தனும் ஒருவனே! தன்னை உணர்ந்த ஞானியும்
ஒருவனே! இப்படி எல்லாவற்றையும், பேதமில்லாமல்
ஒன்றுபடுத்துவதே, **அத்வைதத்தின்!**
சிறப்பு ஆகும்!

(63)



இ மாயாவுக்கும், அதன் மைந்தனான மனதிற்கும் தான் இந்த நாமரூப, ஜக, ஜீவ, ஈஸ்வராதிகளோ தவிர, ஆன்மாவான, நமக்கில்லை என்பதே ஸத்தியம்.

மேலே கூறிய நிலையில், அத்வைத திட உணர்வைப், பெற்றவன் "ஞானியாகும்!" அவன் "ஒருவனே!"

இரண்டும் இல்லை! இருவரும் இல்லை! நாமரூப பேதம், எல்லாம், மாயா "மனதிற்கே!"

ஸ்ரீ பகவானின், ரூபலாவண்யமும்! அளவற்ற மஹிமை பிரபாவமும், "மாயாவுக்கே!"

மனமும் மாயாவும் இல்லையானால்? நாமரூப ஜகத் ஏது? மனம் படைத்த ஜீவன் ஏது? மாயாவை உடைய ஈசன் ஏது? மாயாவும், மனமும், இல்லையானால், (ஒருஜீவன்முக்தனின்) வாக்குக்கோ! வடிவுக்கோ! விளக்கத்திற்கோ! இடமில்லை என்பதே ஸத்தியம்! ஆகவே, வாக்கின் சொல் நிலையில், பல "ஞானி"கள் இருந்தாலும், அங்கு "பலர்" இல்லவே இல்லை! எல்லோரும், அங்கு அந்த "ஒருவனே ஆகும்" என, நன்கு உணர்ந்த ஞானிகள் சொல்லக் கேள்விப் படுகிறோம். இங்கு திரிலோகத்தில், ஒரு ஞானி எனச் சொல்லக் காணோம்?



உ



சாஸ்திரம் சொல்லும், திரிலோகம்
என்பது:— "பூ|புவ|சுவஹ"
என்ற நிலையில்,
பூலோகம்|புவர் லோகம் என்ற பித்ருலோகம்|
சுவர்லோகம் என்ற, சொர்க்க லோகம், ஆகிய மூன்று
ஒன்றை, ஸ்தாபிதம் செய்வதற்கு, ஓர் அதிஷ்
டானம் என்ற "பீடம்" அவசியம் வேண்டும்|
இதை "அடிக்கல்" → பவுண்டேஷன், என்றும் சொல்லலாம்.
இந்த அடிக்கல் இல்லையானால், அந்த ஒன்றை ஸ்தாபனம்
பண்ண இடம், இல்லாமல் போய்விடும்|
"மெய்யை" விளக்க "பொய்யான"
கதை, என்பதைப் போல, ஆத்ம ஞானத்திற்கோ,
அதை உணர்ந்த ஞானிகளுக்கோ, விளக்கம்
கொடுத்து, வழிகாட்டி வழிநடத்தும் நிமித்தமாக,
திரிலோகம் என, உபசாரமாக சொன்னார்கள்.
ஆகவே இங்கு உலகம் ஸத்தியமல்ல|
,, ,, ஞானமும் ஞானிகளுமே| ஸத்தியம்|
"உணர்வு" நிலையில், ஞானமும் இல்லை|
ஞானிகளும் இல்லை, அந்த "ஒன்றே" ஸத்தியம்|



அந்த "ஜடஞானிக்கு"!

சமாதி நிஷ்டா சாதனம்! தேவை இல்லை இல்லை! என்று ஸ்ரீமஹான்கள், சொல்லுவார்கள்! காரணம், அவன் சர்வ சதா, நிஷ்டானு பரனாகவே, இருப்பான். எப்படி என்றால்? நாமரூப ஜக ஜீவ "ஆவரண" மயக்கமும், அவைகளின், குண தோஷமான, "விக்ஷேப" கலக்கமும் இல்லாமல், "ஏகாந்தமாய்" அதாவது, அந்த ஒன்றின் காந்தத்தில் ஈர்க்கப்பட்டவனாய், அந்த ஒன்றிலேயே கலந்து கரைந்தவனாய், அதாவது, ஸ்வய அனுபவத்தில் கண் இருந்தும் குருடாய்! காது இருந்தும் செவிடாய்! வாய் இருந்தும் ஊமையாய்! (தாம் தாமாக, காணும் நிலையும்! பர ஒலியையே கேட்டு, கிரஹிக்கும் நிலையும்! இறை, குரு, உணர்வோடு, எந்த விதமையும் பேசும் நிலையும்!) பரப்பிரத்யக்ஷ நிலையில், இருப்பதால் அவனுக்கு வேறு எந்த சாதனையும் இல்லை! அது தேவையும் இல்லை! அவனிடம் இச்ஜகத்தில், பரோபகார நிமித்தம்,





பேசிப்பழகும் போதும், எக்காரணம்
கொண்டும், எந்நிலையிலும், எவரிடத்தும்,
"ஸங்கல்ப,விகல்பம்",
அதாவது,
குற்றம் குறையான, வார்த்தைகள் வருவதில்லை. அவன்
எங்கும்தாம் நிறைந்திருக்கும் தன்மையால், குறைவு
நிறைவு, தோன்றுவதில்லை. அவன் அனுபவமானது, சம
சாதகர்களிடத்தும், அஞ்ஞானிகளிடத்தும், ஞான
பசியும், கேட்பதிலும் பட்டமரம் போலும், குத்துக்
கல்லைப் போலும், ஓர் பச்சை குழந்தையை போல் பேதைத்தன்மையும், அசையா
ஸ்திரத்தன்மை உள்ளவராய் இருப்பதால் அவன் மேலும்
ஓர் நிலையில் "பாலும் ஜலமும்" கலந்த
நிலை, எப்படியோ, அப்படி இருப்பான், என்று அனுபவ
ஞானிகள் அறிவர். எப்படி என்றால், பாலில் சேரும்
ஜலத்தை, பால் காட்டிக் கொள்ளாத தன்மை போல்,
அஞ்ஞானிகளின், குணதோஷம், அவனைப் பாதிப்பதில்லை.
மேலும், ஓர் நிலையில், அன்னப் பக்ஷியானது, பாலும்,
ஜலமும், கலந்திருந்தாலும், பாலை மட்டும் பிரித்துப்,
பருகிக் கொண்டு, ஜலத்தை விட்டுவிடும் தன்மைபோல்
காட்சியோ, நிகழ்ச்சியோ, ஓசையோ, வார்த்தையோ,
எதைக் கிரஹித்தாலும், "ஸத்தைமட்டும்"
எடுத்துக் கொண்டு, அஸத்தை அக்காலமே, விட்டுவிடுவான்.
ஆகவே அத்தகைய ஞானியைப் பற்றி, வாக்கோ, வரியோ
சொல்லவோ, எழுதவோ முடியாது. அவன் திரிகரண
தாக்கங்களும் அதீதமானவர்கள் ஞானிகள் சொல்லக்
கேள்விபட்டேன்.



பாடல் 39/40

(16) பவகாவ வாஸனையாலும்

அவ்வாஸனையின் வேகம், சோதனையாலும், பவகாவம்
நாம் ஆத்மா என்ற, "பரசாகு" நிலையைப்
வாய்ஞானமாகச்
படித்தாலும், கேட்டாலும், அனுபவ நிலையில் சொன்னாலும்

"த்வைதம்" தான் தோற்றமேயன்றி "அத்வைதம்" தோற்றவும் செய்யாது. உணரவும் முடியாது.
அங்கு தோற்றும் த்வைதத்தை "மறந்து"
நாம் அந்த ஒன்றே என்ற அத்வைதத்தில் "நிறைந்து"
தைலதாரை போல், அப்யாசம் செய்தால்,
அவ்வப்யாசத்தினால், அதுவும் மறந்து, அசையாமல் நின்று
"சகஜ நிலை" தானே பெற முடியும்.

மனம் சகஜ நிலை பெற்று விட்டால், அதுவே அனுபவ
நிலையில் மனம் "மாண்ட" (மனம் மறைந்த
நிலையாகும்)! அப்படி மனம், மறைந்த நிலையையே
ஜீவன் முக்தி என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்!

ஆகவே, மனம் மாள வேண்டுமானால், பிரம்மாத்ம பாவனையை
மனத்தொருமையுடன் செய்வாயாக!



உ

பொருள்:— பூர்வ கர்ம வாசனையாலும், இச்ஜென்ம "பழக்க வழக்கதோடு" (பேச்சு) (செய்கை) குணங்களாலும், சிரவண, மனன, நிலையில், வேத வேதாந்தக் கருத்துக்களை, அப்யாசம் பண்ணினாலும், "த்வைதம்" மறையாது. ஆகவே "அத்வைதம்" தோன்றாது. இது கலியுக மஹிமையாகும்!

இக்கலியுக சாதனை???

(A) அளவற்ற பொறுமை! அன்பு! கருணை!

"நாவு" அடக்கம்! குற்றம் குறைகளை மறக்கல், மன்னிக்கல், விட்டுக்கொடுத்து நாம் விலகல்! எல்லாம் ஸ்ரீ பகவான் பொருள்! எல்லாம் அவன் செயல்! என்ற நிலையில் "நான்! எனது! "எனதை" முழுமையாக, கெடுத்து நாசம் செய்தல்! எல்லாம் நீயே! எல்லாம் உன்செயல்! எல்லாம் உனதே! என மாற்றிப் பிடிக்கல்! இவையே சாதனையாகும்!



(ஆ) மேலே சொன்ன நிலையில், சாதனை செய்தால், தவிதோஷ, பழக்க வழக்க, வாசனையின்
வாதனையும்! சோதனையும்! வேதனையும்! அதைசார்ந்த
சந்தேக துக்க கவலை பயம் அனைத்தும், நாசமாகி விடும்.
இந்த நிலையில், துவைதபயம் தானே மறையும்! → படிப்படியாக,
அத்வைத நிலை தானே நிறையும்!

(இ) பின் எந்த பயிற்சியும்! முயற்சியும்! வேறெந்த
சாதனையும்! தேவை இல்லை. நாம் அங்கு "சகஜ
மாகவே" சகஜானந்த நிலை அனுபவமாகி,
'அகண்ட' பாவனையில், அதுவாகவே இருப்போம்!

17 பாடல் 47 / 48 /
அனவரதமும், இடைவிடாமல், தைலதாரை போல்,
அதுவேநாம்! நாமே அது! என்ற அகண்டாத்மபாவனை,
செய்துவந்தால், விறகைப் பற்றி, எரியும் அக்கினி
யானது, எப்படி விறகு முடிந்தவுடன், அக்கினியும்,
மறைந்து விடுவது போல, "கற்பனையின்
குற்ற உணர்வான, எண்ணங்கள்," நம்
யதாஸ்தானத்தில், ஸ்வயமாய் நின்று "மறு
கணம்" அனைத்தும் பஸ்பமாகி விடும்.



(70)

உ

மேலே சொன்ன, மார்க்கம், எப்படி சாத்தியமாகும் என்றால்?
லௌகீகத்திலும், தர்மாதர்மம் என்ற "புண்ணியபாபம்" உண்டு.
வைதீகத்திலும், தர்மாதர்மம் என்ற "ஸந்தியதர்மம்" உண்டு. (வாக்கும்; செய்கையும்)
காலாதீத பரசொரூபத்தில், இந்த தர்மாதர்மமும், இல்லவேயில்லை.
மேலே சொன்ன, இரண்டையும், விட்ட நிலையில், பரசொரூப ஸ்திதியில், நிலைத்து நிற்பவராக என்கிறீர்.
பொருள்:- இதன் அருக்கம், என்னவென்றால்?
முன்பே பல மடல்களில், கொடுத்திருக்கிறேன்.
லௌகீக கர்மாக்களுக்கு, இரும்பு "ஊசி" என்றும்,
வைதீக கர்மாக்களுக்கு, பொன் "ஊசி" என்றும்,
இவை இரண்டும், கர்மாவின் இணைப்பும், பிணைப்பும் ஆகும்.
இதைப் போலவே, "பஞ்சு" என்றால் "பர" சொரூபம் என்றும்,
"நூல்" என்றால் "இறை" சொரூபம் என்றும்,
"வஸ்திரம்" என்றால் "ஜீவ" சொரூபம் என்றும்,
இப்படி இருந்தோம். பஞ்சு உபயோகம் இல்லாதது.
நூல் இணைப்பும் பிணைப்பும் கொண்டது.



உ

வஸ்திரம், உபயோகம் ஆகும் ஒன்று!
முன்பு சொன்ன, இரு உறுதிகளாலும்,
இரு வஸ்திரங்களை "ஒன்றுக" இணைக்கலாம்! பிணைக்கலாம்!
அதாவது இரு உறுதிகளையும் வைத்து, லௌகீகத்தையும்
தெய்வீகத்தையும், இணைத்து பிணைத்து, "ஓ"
"காமபலன்" அனுபவிக்கலாம்! ஆகவே இரு,
கற்பனையே உலகம் என்றும், கற்பனை விருதவே மோக்ஷம்
என்றும் ஸ்ரீமஹான்களின், சத்திய வாசகம், இருப்பதால்,
"எல்லாம் நீயே" என்றால், லௌகீக எண்ணம்
ஒழிந்து நாசம் ஆகும் என்றும்,
"எல்லாம் ஒன்றே" என்றால், தெய்வீக
எண்ணம், ஒழிந்து நாசம், ஆகும் என்றும், பொருள்
கொள்ள வேண்டும்!
மேலே கூறிய, அவ் இரண்டையும், "அது
நாமே நாமே அது" என மௌன ஸ்திதியில்,
சும்மாவே, சுகமாக இருக்கலாம் நிலையாக!
ஆகவே, இரு மன எண்ணங்களில், உருவாகிய
லௌகீகமும், தெய்வீகமும், "காமா" என்ற
"விறகானது" அது நாம் என்ற "ஞான"
அக்கினியால் தருகி சாம்பல் ஆகி, அவ்விறகானது
முடிந்த நிலையில், அவ்வக்கினியும் தானே சாந்தியாகும்!



இப்படி, லௌகீகத்தையும், தெய்வீகத்தையும், இல்லாமல் பண்ணுவதே, அதுவே நாம்! நாமே அது! என்ற ஸ்வய அனுபவமாகும். இதை

இன்றைய நூலையால், ஸ்ரீமஹான்கள் என்ன சொல்கிறார்கள் என்றுவி? முன் சொன்ன இரும்பு உருளையையும், பொன் உருளையையும்! அதனுள் நால் கோர்க்கால்தானே இணைப்பும், பிணைப்பும், நடைபெறும்?

மேலே சொன்ன அவிழ்சிகள், ஒற்றுமையே, "காதை உடைத்துவிட்டால்" இணைப்பும், பிணைப்பும், எவ்வாறு நடக்கும் என்கிறார்! நாணத்தியால், கர்மாவை எரிப்பதும், குருஜிகளின் காதுகளை உடைப்பதுவும், இரண்டும் ஒன்றே!

**18** பாடல் 50/ 51/ 52/ 54/ 55/

(A) காலம், தேசம், வர்த்தமானம் என்ற, மனோ வியாபாரம்! இம்மூன்றும் இல்லாத தன்மையிரால், "காலம்" காட்சிகள், இல்லவே இல்லை!

(B) புண்ணியபாபம் என்ற, "வினையின்" தாவங்கள் இல்லாமல் இருக்கும்போது, "சொந்தபந்தம்"

(C) எவ்வாறு தொடர முடியும்? அஞ்ஞானம், மூலமாகிய, "அஞ்ஞானமே" இல்லையென்றும் போது, "ஜனனமரணம்" ஏது?



(73)

(D) நாமரூப எந்த பொருளும், உண்டாகாமல், இருக்கும் போது, ஜனனம் என சொல்ல இடமே இல்லை!

(E) நாமரூப, எந்த பொருளும், உண்டாகாமல் இருக்கும் போது, அழிந்ததென்றும், கெட்டுப் போயின என்றும், எவ்வாறு சொல்ல முடியும்?

(F) எந்த பொருளாவது, எங்கேயாவது, இருந்தால் அல்லவா, இது **இப்படி அவ்விதம்**, இருக்கிறது, என சொல்ல முடியும்?

(G) மேலே கூறிய அனைத்திற்கும், காரண காரியமாக உள்ளது "**ஸ்வரூப**" சொரூபமே!

(H) ஆகவே, பதம்பதமாக சொல்லும் "**நாமா**"வும் இல்லை!

,, பதார்த்தமாக ,, "**ரூபமும்**" இல்லை!

,, விதவிதமாக விளங்கும், எந்த பொருளும் இல்லை!

,, பரந்து விரிந்து காண்பதைப் போல், தோற்றுகின்ற "**ஜகத், ஜீவ, ஈஸ்வரர்கள்**" இல்லை

ஆகவே ???

(I) "**இங்கு**" எனச் சொல்லும் பொருளும் இல்லை!

இங்கு "**உனது**" எனச் சொல்லும் பொருளும் இல்லை!

இவ்விருநிலைகளில், சொல்லும் "**வாக்கோ**"!

எழுதும் "**வரி**" வடிவமோ! அவற்றின் "**சொல்**" பொருளோ,

ஓர் "**அணுவும்**" இல்லவே இல்லை யென,

மௌன மௌனமாகி, சுகமாகவே சும்மாயிருப்பாயாக!



# ம

பொருள்:—

(A) காலம், தேசம், வர்த்தமானம், ஆகிய, இம் மூன்றும் இல்லாத தன்மையில் நானும் காட்சி அனைத்தும் "மண்" என்ற "பரமே"!

(B) புண்ணிய பாபம் என்றும், சொந்தம், பந்தம், பாசம் என்றும் பிணைப்பும்! இணைப்பும்! "மாயமனத்தின்" செயலே! வேறொன்றும் இல்லவே இல்லை. ஆகவே எல்லாம் "மண்" என்ற "பரமே"!

(C) அஞ்ஞானம் என்பதே, நம் கவனக் குறைவு ஆகும். ஆகவே நம் கவனக்குறைவால், நாம் பிறக்கிறோம் என்றும், நாம் இறக்கிறோம் என்றும் மனதினால் "மனக்" கணக்கு போட்ட தன்மையினால் இக் குழப்பம் ஏற்பட்டது. ஸ்ரீ ஸத்குரு கிருபையினால், அக்குழப்பம், நீங்கி விட்டது. ஆகவே பிறப்பும் இறப்பும், இல்லவே இல்லை, ஏனெனில் நிறைந்து இருப்பது ஒன்றே என்றும்; "அஞானமே"! என்றும் உணர்வு பூர்வமாக உணர்ந்த தன்மையினால், எல்லாம் "மண்" என்ற "பரமே" எனத் தெளிந்தோம்!

(D) நாமரூப பொருளே எங்குமே, எப்போதுமே, எந் நிலையிலும், இல்லவே இல்லை. எம் "மனமய" பிராந்தி மயக்கத்தினால், அப்படி தோன்றுதையினால், அப்படி உணர்ந்திருந்தோம். இப்போது (போன்ற) உணர்ந்து தெளிந்த தன்மையினால், எல்லாம் "மண்" என்ற "பரமே" என தெளிந்துணர்ந்தோம்!



இ

E) எந்த ஒருபொருளும், இல்லாமல்
இருக்கும் போது, நாம, ரூப, பொருள்,
வந்தன என்றும், இருந்தன என்றும், அவை கெட்டுப்
போயின என்றும், பழக்க வழக்க தோஷத்தால்
புலம்பித் திரிந்தோம். அத்தோஷம் நீங்கிய பயனால்,
இருப்பது ஒன்றே என்றும், அது யாமே என்று, உணர்ந்தோம்.
ஆகவே, எல்லாம் "மண்ணே" அது "பரமே"
என, சும்மா சுகமாக இருக்கிறோம்!

E) எந்தப் பொருளாவது எங்கேயாவது இருந்தால்
அவ்வவரோ, இது இப்படி இருக்கிறது! இருந்தது!
எனச் சொல்ல முடியும்? அறியாமையின், மனோ மயக்கத்
தால், இவர் அவ்வாறு புலம்பினர். யாமும் நம்பினோம்.
இப்போது, ஸத்குரு கிருபையால், தெளிந்தோம். ஆகவே
எல்லாம் "மண்" என்ற "பரமே" என உணர்ந்து,
ஆனந்தம் அடைகிறோம்!

G) சித்தத்தின் மயக்கத்தினால், நாமரூப
மாக கண்டோம்! ஸத்குரு, உபதேசத்தால்,
எல்லாம் "ஸித்பரம்" என உணர்ந்ததால்,
எல்லாம் "மண்" என்ற "பரமே" எனத் தெளிந்தோம்.

H) பத முக்தி என்றும், பர முக்தி என்றும், தேவதெய்வ
இருப்பிடம் என்ற நிலையால் பதம்பதமாய்



சொல்லும், பொருளும்; (76)
வேண்டாச் செயலுமற்று,
சும்மா இருந்து சுகம்
பெறுவது எக்காலம்?
பட்டினத்தார்!

பரித்த நிலையில் புத அர்த்த "நாமா" ஸத்குரு கிருபையால், நம்மாலேயே அதை பொய் என உணர்ந்தோம். பார்க்கிற, உண்ட, புசார்த்த (உணவு) நிலையில், "ரூபக"மாக, பாவனை செய்தோம். அதை பொய் என உணர்ந்த தன்மையிறலும்; "விதவித மாயா" அழித்து, நாமரூப பொருள்களும், பொய் என, விளங்கி உணர்ந்த தன்மையிறலும். எங்கும் "பரந்து விரிந்த" கோடானு கோடி கோள்களும், சூரிய சந்திராதிகளும், ஜடகட படாதிகளும், நாமரூப, மாத உண்டென "புராண இதிகாச" கதைகளை கேட்டு, நம்பியதை பொய் என உணர்ந்தோம்.

ஆகவே எல்லாம் "மன்" என்ற "பிரமே" என, உணர்ந்து, ஆனந்தம் அடைகிறோம்!

(I) "இல்லை" எனச் சொல்லும், பொருளும் இல்லை!
"உண்டு" எனச் சொல்லும், பொருளும் இல்லை!

இப்படி இருநிலைகளில், சொல்லும் போது, அதை நீங்காத "நம்பவும்" முடியாது தான். இதை உணரவும்! "மாயாமனம்" என்ற "கனாமனத்" தொடர் புடையவராய், இருந்தகாலத்தில், அம்மனமையத் தூக்கத்தில் கனவு கண்டது போல்.
திருவி



(77)

இ

சொல் என்பது நாமரூப கற்பனை! பொருள் என்பது கற்பனையின் தோற்றம்! செயல் என்பது அத்தோற்றத்தின் செயல்பாடு! இம்மூன்றும் வினையின் விளைவும்! ஞான மறை இவையுமாகும்!

உண்டு என எண்ணினோம்! ஸத்குரு திருவையால் அறியாமையின் உறக்கத்திலிருந்து விழித்தோம் அனைத்தும் பொய் எனவும், இல்லையென்றும் உணர்ந்தோம்! கனவில் "உண்டு" என்றதோ! விழிப்பில் "இல்லை" என்றதோ! "இரண்டும் பொய்" என உணர்ந்தோம்! யாம் உண்டு என ஏற்றதும்! யாம் இல்லையென மறுத்ததும்! மேலோடிய அவ்விரண்டையும் பக்கம் பக்கமாய்! "எழுதியதும்" அதுபற்றி பலகாலம் குடிகாரன் போல், "புலம்பி" திரிந்ததும்!

குடிகாரன் புத்தி விடிந்தால் போச்சு! என்பது போல், சொல்லும் அற்று! பொருளும் அற்று "வீண்" ஆகிவிட்டது! அதன் காரணம்? எல்லாம் ஒன்றே என உணர்ந்தோம்! அது "மண்" என்ற "பரமே" எனத் தெளிந்தோம்! எமக்கு அன்னியம், எதுவும் இல்லை என்ற "பர" உணர்வால், ஸத்குரு திருவையால், "மஹா மௌனமாகி" சுகமாகவே, அம்மா இருக்கிறேன்!

பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!